355

# தாமரை வாசகம்

355
3.52

மூன்றாம் புத்தகம்

மா. இராசமாணிக்கம் M.O.L., L.T.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 AUG 1952

நேஷனல் பப்ளிஷிங் கம்பெ
...ட்டி தெரு, சென்
...ணை 7

TB.
031(3)
N52
146193

# தாமரை வாசகம்

## மூன்றும் பத்தகம்

AUG 1952
MADRAS

டாக்டர் மா. இராசமாணிக்கம்
M.A., L.T., M.O.L., PH.D.
விவேகானந்தர் கல்லூரி, சென்னை

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை—1

பதிப்புரிமை] 1952 [விலை அணா 7

முதற் பதிப்பு—1949
இரண்டாம் பதிப்பு—மே, 1950
மூன்றும் பதிப்பு—1951
நான்காம் பதிப்பு—1952

146193
சென்னை-600 008.

*[Approved by the Text-Book Committee, Madras for class use, vide page* 30 *of Part I of Supplement to Part I-B of Fort St. George Gazette dated 23rd May* 1950]

**beer Printing Works, Madras (1868)**

# முகவுரை

**தாமரை வாசகம் - மூன்றும் புத்தகம்** என்னும் பெயர்கொண்ட இந்நூல் மூன்றும் வகுப்புப் பிள்ளைகட்கு உரியது. இரண்டாம் வகுப்பு நூலில் தரப்பட்டுள்ள பாடங்களின் வளர்ச்சியை இந்நூற் பாடங்களிற் காணலாம்.

நாட்டில் வழங்கும் **இரட்டைச் சொற்கள், பழமொழிகள், பாரதியார் பாடல்கள், அல்லி அரசி மாலையில்** உள்ள பாடல்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. மூன்றும் வகுப்புப் பிள்ளைகளுக்குத் தேவையான பள்ளிக்கூட அறிவு, வீட்டு அறிவு, கிராம அறிவு, பொது அறிவு என்பன பாடங்கள் வாயிலாக நன்கு வற்புறுத்தப்படுகின்றன. முதல் இரண்டு வகுப்புகளிற் கற்ற சொற்களைக் கொண்டே பெரும்பாலான வாக்கியங்கள் ஆய்ந்து அமைக்கப்பட்டுள்ளன; புதிய சொற்களும் ஆங்காங்கு விரவி வருமாறு சேர்க்கப்பட்டுள்ளன. படம் பார்த்துக் கதை கூறும் பயிற்சியும் தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடச்செய்தியின் கீழ் **அரும்பொருள், பயிற்சி** என்பவை தரப்பட்டுள்ளன. பயிற்சியில் பெயர்ச்சொல் - வினைச்சொல், ஆண்பால் - பெண்பால், ஒருமை - பன்மை, அறுவகைப் பெயர்கள், வாக்கியம், பத்தி (பாரா), எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள் என்பன வகுப்புக்கு ஏற்ற வகையில் ஆங்காங்கு விளக்கப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இந்நூல், பிள்ளைகட்குத் தேவை என இக்காலக் கல்வி அறிஞர் வற்புறுத்தும் பாடப் பொருள்களைத் தன் அகத்தே பெற்றது என்பதும், பிள்ளைகள் அறிவாகிய மலருக்கு அழகும் மணமும் ஊட்ட வல்லது என்பதும் வற்புறுத்திக் கூறலாம்.

விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எங்கள் வீடு | ... | 5 |
| 2. | எங்கள் படிப்பகம் | ... | 7 |
| 3. | என் நண்பர்கள் | ... | 10 |
| 4. | எல்லோரும் உடன்பிறந்தவர் (பாட்டு) | ... | 12 |
| 5. | இரட்டைச் சொற்கள் | ... | 14 |
| 6. | பள்ளி விளையாட்டுகள் | ... | 16 |
| 7. | பள்ளித் தோட்டம் | ... | 18 |
| 8. | உலோகங்கள் | ... | 21 |
| 9. | பாரதியார் | ... | 24 |
| 10. | எங்கள் கிராமம் | ... | 27 |
| 11. | பாரதியார் பாடல்கள் | ... | 30 |
| 12. | கிராம அதிகாரிகள் | ... | 33 |
| 13. | காக்கையும் நரியும் | ... | 36 |
| 14. | கிராமக் கைத்தொழில் | ... | 38 |
| 15. | பிரயாண வசதி | ... | 41 |
| 16. | மழை (பாட்டு) | ... | 44 |
| 17. | கடிதம் | ... | 46 |
| 18. | கடிதத்தின் பிரயாணம் | ... | 49 |
| 19. | பழமொழிகள் | ... | 53 |
| 20. | அறிவுரை (பாட்டு) | ... | 55 |
| 21. | தெருவில் நடந்த நிகழ்ச்சி | ... | 57 |
| 22. | வழியைப் பார்த்து நட | ... | 60 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 23. | செஞ்சிலுவைச் சங்கம் | ... | 63 |
| 24. | கிராமத் திருவிழா | ... | 66 |
| 25. | குறத்தி குறி கூறல் (பாட்டு) | ... | 69 |
| 26. | மருத்துவ மனை | ... | 71 |
| 27. | நாயும் அல்லி மலரும் | ... | 74 |
| 28. | போலீஸ் நிலையம் | ... | 76 |
| 29. | வீண் பெருமைக்காரன் (நாடகக் காட்சி) | ... | 79 |
| 30. | செய்யுட்பாடம் | | |
| | (1) ஆத்தி சூடி | ... | 83 |
| | (2) கொன்றை வேந்தன் | ... | 84 |
| | (3) வெற்றி வேற்கை | ... | 85 |
| | (4) தமிழ் நாட்டு வணக்கம் | ... | 86 |
| | புதிய சொற்கள் | ... | 87 |

# தாமரை வாசகம்

## மூன்றும் புத்தகம்



காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

—பாரதியார்

# 1. உண்மை மலர்மாலை எது?

படம் பார்த்துக் கதை சொல்.



# 2. கிராமத் தொழில்கள்

**படம் பார்த்து விவரங்களை எழுது.**





# 1. எங்கள் வீடு

1. என் பெயர் **தமிழரசி**. நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறேன். என் தம்பி **நக்கீரன்**. அவன் மூன்றும் வகுப்பில் படிக்கிறுன். எங்கள் தகப்பனர் படித்தவர். அவர் வயல் வேலே செய்கிருர். என் தாயார் படித்தவர். அவர் வீட்டு வேலேகளேச் செய்கிருர். எங்கள் பாட்டியார் கடைக்குப் போய்வருவார்.

2. எங்கள் வீடு மாடி வீடு. அதில் நான்கு அறைகள் உண்டு. முதல் அறையில் நாற்காலி களும் மேசையும் உண்டு. தகப்பனுரைப் பார்க்க வருவோர் அந்த அறையில் இருந்து பேசுவர். அந்த அறையில் ஒரு பீரோ இருக் கிறது. அது நிறையப் புத்தகங்கள் இருக் கின்றன. தகப்பனுரும் தாயாரும் அவற்றைப் படிப்பார்கள்.

3. அடுத்த அறை படுக்கை அறை. படுக்கை அறையில் கட்டில், மெத்தை, தலே யணைகள், பாய்கள், கண்ணுடி, துணிகள் வைக்கும் பீரோக்கள் முதலியன இருக்கின்றன. மூன்ரும் அறை சாமான் அறை. சமையல் சாமான்கள், பாத்திரங்கள் முதலியன அந்த அறையில் இருக்கின்றன.

4. நான்காம் அறை சமையல் அறை. அங்கு அடுப்பு, அம்மி, ஆட்டுக்கல், சமையல் பாத்திரங்கள், உண்கலங்கள் முதலியன இருக்

கின்றன. வீட்டுப் பின்புறம் கிணறு இருக் கிறது. அதைச் சுற்றிலும் தோட்டம் இருக் கிறது. வீட்டுக்கு எதிரில் எங்கள் படிப்பகம் இருக்கிறது. எங்கள் வீடு சுத்தமாய் இருக்கிறது; வெளிச்சமும் காற்ளேட்டமும் உடையது.

### அரும்பொருள்

நக்கீரன் – ஒரு தமிழ்ப் புலவர் பெயர். அது மாண வனுக்கு வைக்கப்பட்டது. உண்கலம் – சாப்பாட்டுத் தட்டு, கிண்ணம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. தமிழரசி வீட்டில் யார் யார் என்ன என்ன வேலை களைச் செய்கிருர்கள் ?

2. அவள் வீட்டில் எத்தனை அறைகள் இருக் கின்றன ?

3. ஒவ்வோர் அறையிலும் உள்ள பொருள்கள் எவை ?

4. ஒவ்வோர் அறையின் பயன் யாது ?

5. ஒவ்வோர் அறையும் சிறப்பாக எந்த இரண்டைப் பெற்றிருக்க வேண்டும் ?

II. 1. முதலியன, உண்கலம், காற்ளேட்டம், போய் வருதல் – இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத் துச் சொல்.

2. உடையது × இல்லாதது
முதல் × கடைசி
வருவார் × வாரார்

இவை எதிர்ச் சொற்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.



## 2. எங்கள் படிப்பகம்

1. நாங்கள் பெரிய வீட்டில் வாழ்கிறோம். நாங்கள் சிறிய வீட்டில் படிக்கிறோம். அது எங்கள் படிப்பகம். நானும் என் அக்காளும் அதில் படிக்கிறோம். நான் மூன்றாம் வகுப்பில் படிக்கிறேன். என் அக்காள் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறாள்.

2. எங்கள் படிப்பகத்தைப் பாருங்கள்: நாங்கள் பாய்மீது உட்கார்ந்து படிப்போம்; சிறிய சாய்வு மேசைமீது நோட்டுப் புத்தகம் வைத்து எழுதுவோம். சுவரில் மாட்டப்பட்டுள்ள புத்தகத் தட்டுகளைப் பாருங்கள்: ஒன்றில் என் பாடப் புத்தகங்கள் இருக்

கின்றன; மற்றொன்றில் என் அக்காள் படிக்கும் பாடப் புத்தகங்கள் இருக்கின்றன. மூன்றாவதில் பல கதைப் புத்தகங்கள் இருக்கின்றன. படிப் பகத்தின் நடுவில் உள்ள மேஜைமேல் கடிகாரம் இருக்கிறது.

3. நாங்கள் நாள்தோறும் காலையில் பாடங்களைப் படிப்போம்; வீட்டுக் கணக்கு களைப் போடுவோம்; கையெழுத்துப் பாடம் எழுதுவோம்; மாலையில் வீட்டுத் தோட்டத்தில் விளையாடுவோம்; பிறகு விளக்கண்டை உட் கார்ந்து மறு நாளைக்கு வேண்டும் பாடங்களைப் படிப்போம்.

4. எங்கள் தாயார் படித்தவர். அவர் எங்களுக்குத் தெரியாதவற்றை விளக்குவார். எங்கள் தகப்பனாரும் சில நாட்களில் புதிய பாடங்களைக் கற்பிப்பார்; எங்கள் ஐயங்களைப் போக்குவார். எங்கள் பாட்டியார் பல புதிய கதைகளையும் நிகழ்ச்சிகளையும் கூறுவார்.

### அரும்பொருள்

படிப்பகம் - படிக்கும் வீடு. ஐயம் - சந்தேகம். நிகழ்ச்சி - நடந்த செயல்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. படிப்பகத்தில் படிப்பவர் யாவர்?
2. அவர்கள் எந்த எந்த வகுப்புகளில் படிப்பவர்?

3. மூன்று புத்தகத் தட்டுகளிலும் என்ன என்ன புத்தகங்கள் இருக்கின்றன ?

4. பிள்ளைகள் காலையில் என்ன வேலைகளைச் செய் கிருர்கள் ? மாலையில் என்ன வேலைகளைச் செய்கிருர்கள் ?

5. பிள்ளைகளின் பெற்ருேர் பிள்ளைகட்கு எந்த வழி களில் உதவுகிருர்கள் ?

6. பாட்டியார் செய்யும் உதவி யாது ?

II. 1. படிக்கிறேன், படிக்கிருள், படிக்கிருேம்—இவற் றுள் தக்கதைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப் படி :—

(1) நான்——. (2) அக்காள்——. (3) நாங்கள்——.

2. ஐயம் - ஒரு சந்தேகம்
ஐயங்கள் - பல சந்தேகங்கள்
பழம் + கள் = பழங்கள்
ஐயம் + கள் = ஐயங்கள்

சேர்த்துப் படி :—
மரம் + கள், வரம் + கள், பலகை + கள்.

3. காலை × மாலை
பெரிய × சிறிய
மேல் × கீழ்

இவை எதிர்ச் சொற்கள். இவற்றைத் தனித்தனி வாக் கியத்தில் அமைத்துச் சொல்.

4. இப்பாடம் நக்கீரன் சொல்வதுபோல் அமைந் திருக்கிறது. இதனை நீ சொல்வதுபோல அமைத்துச் சொல்.

5. உன் வீட்டில் படிப்பகம் உண்டா ? உன்னிடம் என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன ?



## 3. என் நண்பர்கள்

1. சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் பள்ளி விடுமுறை நாட்கள். அந்த நாட்களில் என் வகுப்பு மாணவர் நால்வர் என் படிப்பகத்திற்கு வருவார்கள்; பாடங்களைப் படிப்பார்கள்; கணக்குப் போடுவார்கள்; விளையாடுவார்கள்.

2. என் நண்பர் நால்வருள் ஒருவன் **அப்துல்லா** என்பவன். அவன் ஒரு முஸ்லிம். அவன் படிப்பதில் சமர்த்தன்; நன்றாய் விளையாடுவான். **ஜான்** என்பவன் மற்றொருவன். அவன் ஒரு கிறிஸ்தவன். அவன் படிப்பதிலும் கணக்குப் போடுவதிலும் வல்லவன்; விளையாட்டுகளிலும் சமர்த்தன்.

3. **கோபாலன்** என்பவன் பெருமாள் கோவில் அர்ச்சகர் மகன். அவன் பாடுவதில் வல்லவன்; படிப்பிலும் சமர்த்தன். **கோவிந்தன்** என்பவன் கிராமத் தச்சர் மகன். அவன் எங்கள் வகுப்பில் முதல் மாணவன்; மிகவும் நல்லவன்.

4. நாங்கள் ஐவரும் என் படிப்பகத்தில் கூடுவோம். ஒருவன் நடந்த பாடங்களில் கேள்விகள் கேட்பான்; மற்ற நால்வரும் வரிசையாய்ப் பதில் கூறுவோம். கோபாலன் மற்றவர்க்குப் பாட்டுகளைப் பாடிக் காட்டுவான். நாங்கள் அவனைப் பின்பற்றி இசையுடன் பாடுவோம்.

### அரும்பொருள்

பள்ளி விடுமுறை நாள் - பள்ளி மூடப்பட்டுள்ள நாள்; பள்ளிவேலை இல்லாத நாள். அர்ச்சகர் - பூசை செய்பவர். இசை - இராகம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. மாணவர் எந்த நாட்களில் படிப்பகத்திற் கூடுவர்?
2. மாணவர் படிப்பகத்தில் என்ன செய்வர் ?
3. நண்பர் நால்வர் யாவர் ?
4. ஐவரும் யாரிடம் பாட்டுகளைக் கற்பர் ?

II. புத்தகம் — ஒரு பொருளின் பெயர்.
படிப்பகம் — ஓர் இடத்தின் பெயர்.
மேசை, நாற்காலி, கடிகாரம் — **பொருட்பெயர்கள்.**
வீடு, தோட்டம், பள்ளி, அறை — **இடப்பெயர்கள்.**




## 4. எல்லோரும் உடன்பிறந்தவர்

1. தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
   திக்கை வணங்கும் துருக்கர்
   கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
   கும்பிடும் ஏசு மதத்தார்
2. யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
   யாவினும் நின்றிடும் தெய்வம்
   பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
   பற்பல சண்டைகள் வேண்டா.
3. அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
   அத்தனை பேரும் நிகராம்;
   இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
   யாவரும் ஒன்றென்று கொண்டால்.

—பாரதியார்

## அரும்பொருள்

பார் - பூமி. முரசு - முரச வாத்தியம். அன்பு - பிரியம்.

## பயிற்சி

1. கோயில், பார்—இடப்பெயர்கள். இவைபோல நான்கு இடப்பெயர்களைக் கூறு.

2. சிலுவை, முரசு—பொருட்பெயர்கள். இவைபோல நான்கு பொருட்பெயர்களைக் கூறு.

3. வருஷம், மாதம், நாள், பகல்
தாது வருஷம், ஆவணி மாதம்,
நேற்று, இன்று, நாளை
} இவை காலங்களை உணர்த்தும் பெயர்கள்; காலப் பெயர்கள்.

சித்திரை, இரவு, நடுப்பகல்—இவை என்ன பெயர்கள்?

4. இவற்றின் பெயர்களைக் கூறு :—

சிலுவையுள்ள கோவில், முஸ்லிம் தொழுகை நடத்தும் கோவில்.

5. உங்கள் ஊரில் உள்ள கோவில்களின் பெயர்களைச் சொல்.

6. தக்க சொற்களைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப் படி :—

(1) மேசை செய்பவன் ——. (தட்டான், தச்சன்)

(2) —— மரத்தில் மாங்காய்கள் தொங்குகின்றன. (வாழை, மா)

(3) புறு ஒரு ——. (விலங்கு, பறவை)

7. பற்பல × சிற்சில
ஒன்று × பல
வேண்டும் × வேண்டா
} எதிர்ச் சொற்கள். இவற்றைச் சொந்த வாக்கியங்களிற் பயன்படுத்துக.

## 5. இரட்டைச் சொற்கள்

1. கண்ணன் கலகல என்று சிரித்தான்.

2. இலைகள் சலசல என்று ஒலிக்கின்றன.

3. பயங்கர ஓசை கேட்ட வரதன் வெலவெலுத்து நின்றான்.

4. மரங்கள் மளமள என்று முறிகின்றன.

5. சோறு தளதள என்று கொதிக்கிறது.

6. வாள் பளபள என்று மின்னுகிறது.

7. பழநி படபட என்று பேசினான்.

8. பானைகள் தடதட என்று உருண்டன.

9. கந்தன் கடகட என்று பாடம் ஒப்பித்தான்.

10. தண்ணீர் மடமட என்று பள்ளம் நோக்கிப் பாய்கிறது.

11. வரதன் வழவழ என்று பேசினான்.

12. பயிர் பச்சைப்பசேர் என்று இருக்கிறது.

13. பால் வெள்ளை வெளேர் என்று இருக்கிறது.

14. காகம் கன்னங் கறேல் என்று இருக்கிறது.

15. இரத்தம் செக்கச் செவேல் என்று இருக்கிறது.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. கண்ணன், மரம், சோறு, வாள், பனை, தண்ணீர், பால், காகம், இரத்தம்—இவை எவற்றின் பெயர்கள்?

2. பள்ளம் × மேடு.—இவை எவற்றின் பெயர்கள்?

II. 1. தக்க சொற்களைச் சேர்த்துப் படி :—

| | | | |
|---|---|---|---|
| (1) நெல் | வால் | (2) மண் | வளையல் |
| பல் | கழி | பொன் | உரல் |
| மூங்கில் | பொடி | கல் | தட்டு |
| நாய் | வயல் | பித்தளை | குடம் |

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களைச் சேர்த்துப் படி :—

(1) வைரம் —— என்று மின்னுகிறது.

(2) பெருங்காற்றால் மரம் —— என்று முறிந்தது.

(3) கொக்கு ——— என்று இருக்கிறது.

(4) இலைகள் ——— என்று இருக்கின்றன.

3. எதிர்ச்சொல் கூறு :—

பகல், முன், காலை.

4. **மனிதன்** - பொருட்பெயர். ஆனால் அவனுடைய **கை, கால், தலை,** விரல், மூக்கு என்பன பொருட் பெயர்கள் அல்ல. அவை உறுப்புகள் (சினைகள்) ஆதலால் **சினைப்பெயர்கள்** எனப்படும்.

(1) மரம் - பொருட்பெயர். கிளை, மிலாறு, இலை - **சினைப்பெயர்கள்**

(2) குதிரை - பொருட்பெயர். வால், கால், தலை, காது—**சினைப்பெயர்கள்.**



## 6. பள்ளி விளையாட்டுகள்

1. இது எங்கள் கிராமப் பள்ளி. இதில் எட்டு வகுப்புகள் இருக்கின்றன. அந்த வகுப்பு களில் இருநூறு பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களில் எண்பது பேர் பெண்கள். எங்கள் பள்ளியில் ஆசிரியர் எண்மர் இருக்கின்றனர்.

2. எங்கள் பள்ளிக்கு எதிரில் விளையாடும் இடம் இருக்கிறது. அது மிகவும் பெரியது. அதில் பெரிய பிள்ளைகள் கால்பந்து ஆடுவார் கள்; ஓடுவார்கள்; தாண்டுவார்கள்; தண்டால் எடுப்பார்கள். ஊஞ்சல் ஆட்டம் ஆடுவார்கள்; 'பார்' விளையாடுவார்கள். சிறிய பிள்ளைகள் ஓடுவார்கள்; சிறிய பந்தினை உதைத்து விளை யாடுவார்கள்.

3. பெண்கள் ஊஞ்சல் ஆடுவார்கள்; நொண்டி ஆட்டம் ஆடுவார்கள்; கைகால்களை நீட்டுதல், மடக்குதல் முதலிய பயிற்சிகளைச் செய்வார்கள்; கைப்பந்து ஆடுவார்கள்; கயிற்றைத் தாண்டுவார்கள்; ஓடுவார்கள்.

4. இந்த விளையாட்டுகளால் உண்டாகும் நன்மை என்ன? கைகால்களை அசைப்பதால் உடம்பில் வியர்வை உண்டாகிறது. உடம்பில் உள்ள அசுத்த இரத்தம் வியர்வையாக வெளி வருகிறது. அதனுல் உடம்பில் உள்ள இரத்தம் சுத்தப்படுகிறது; இரத்த ஓட்டம் அதிகப்படுகிறது. இவற்றுடன் உடல் உரம் பெறுகிறது. எங்கள் ஆசிரியர் இந்த விவரங்களை எங்களுக்குக் கூறினுர். நாங்கள் நாள்தோறும் மாலையில் விளையாடுகிறோம்; உரம் பெறுகிறோம்.

### அரும்பொருள்

எண்மர் - எட்டுப்பேர். உரம் - பலம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. ஆண் பிள்ளைகள் என்ன என்ன விளையாட்டுகள் விளையாடுகிறுர்கள்?

2. பெண்கள் என்னென்ன விளையாட்டுகளில் பயிற்சி பெறுகிறுர்கள்?

3. விளையாட்டுகளால் உண்டாகும் நன்மை என்ன?

II. இப்பாடத்திலிருந்து (1) பொருட்பெயர், (2) இடப்பெயர், (3) காலப்பெயர், (4) சினைப்பெயர்களுக்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

3. தோட்டத்தில் உள்ள கீரை வகைகள் எவை?

4. தோட்டத்தில் உள்ள பூ வகைகள் எவை?

5. இத்தோட்டத்திலிருந்து என்னென்ன பழங்கள் கிடைக்கும்?

6. இத் தோட்டத்திலிருந்து என்னென்ன காய்கள் கிடைக்கும்?

II. 1. இத்தோட்டத்திலிருந்து கிடைக்கும் கீரைகளின் பெயர்களையும் பூக்களின் பெயர்களையும் எழுது.

2. தோட்டத்தில் செடியை நடுமுன் என்னென்ன செய்யவேண்டும்? நீ அறிந்தவரை கூறு.

3. தோட்டவேலையால் பிள்ளைகள் அடையும் நன்மைகள் யாவை? நீ அறிந்தவரை எழுது.

III. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. முல்லை — பூக்கும்.
2. தக்காளி — காய்க்கும்.
3. வாழை — காய்க்கும்.
4. வாழைக்குக் — இல்லை.
5. மாமரத்துக்குக் — உண்டு.

IV. நன்மை, தீமை, மகிழ்ச்சி, வருத்தம், வெண்மை, கருமை என்பவை குணங்களைக் குறிக்கும் பெயர்கள். ஆதலால் இவை **குணப் பெயர்கள்** எனப்படும்.

தோட்டம், வாய்க்கால், பாத்தி, கிணறு — என்ன பெயர்கள்?



## 8. உலோகங்கள்

1. உலோகங்கள் என்பவை யாவை? பொன், வெள்ளி, இரும்பு, ஈயம், செம்பு, பித்தளை, வெண்கலம் முதலியவை **உலோகங்கள்** எனப்படும். இவை பூமியில் மண், கல் இவற்றுடன் கலந்து இருக்கும். இவை எடுக்கப்பட்டுச் சுத்தம் செய்யப்படும். இவற்றை வெட்டி எடுக்கப்படும் இடங்கள் **சுரங்கங்கள்** எனப்படும்.

2. உலோகங்களில் மிகவும் மதிப்புடையது பொன். அதன் நிறம் மஞ்சள். சுத்தமான பொன் **தங்கம்** எனப்படும். தங்கத்துடன் சிறிது செம்பு கலந்தால் **பொன்** ஆகும். பொன்

நாணயமே **பவுன்** என்பது. பொன்னைக் கொண்டு பாத்திரங்களும் நகைகளும் செய்ய லாம்.

3. வெள்ளி வெண்மை நிறம் உடையது; பொன்னைவிட மதிப்புக் குறைந்தது. வெள்ளி யைக் கொண்டு பாத்திரங்களும் நகைகளும் செய்யலாம்.

4. உலகில் மிகுதியாகப் பயன்படும் உலோகம் இரும்பு. அதன் நிறம் வெண்மை. ஆனால் காற்றும் தண்ணீரும் பட்டு அது கரு நிறம் அடைகிறது. இரும்பைக் கொண்டு கரண்டி, சுத்தி, கத்தி, உளி, அரிவாள், பூட்டு முதலிய பல பொருள்களைச் செய்யலாம்.

5. செம்பு சிவந்த நிறம் உடையது. செம்பைக்கொண்டு குடம், தவலை, செம்பு, கம்பி கள், தட்டுகள் முதலிய பல பொருள்களைச் செய்யலாம். செப்புப் பாத்திரங்களில் புளிப்புப் பொருள்கள் பட்டால் களிம்பு உண்டாகும். களிம்பு உடம்பிற்குக் கெடுதி செய்யும். அதனால் செப்புப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசப்படும். அப்பொழுது களிம்பு உண்டாகாது.

6. ஈயம் வெள்ளீயம், காரீயம் என இரண்டு வகைப்படும். வெள்ளீயமே சுத்த மானது. அதுவே முன் சொன்ன பாத்திரங் களில் பூசப்படுவது. ஈயப்பாத்திரங்கள் சமை யல் செய்யப் பயன்படும்.

7. பித்தளை, வெண்கலம் என்பன கலப்பு உலோகங்கள். பித்தளைப் பாத்திரத்திலும் களிம்பு உண்டாகும். ஆதலால் அதற்கும் ஈயம் பூச வேண்டும். வெண்கலத்தில் களிம்பு உண்டாகாது.

### அரும்பொருள்

பித்தளை—செம்பும் துத்தநாகமும் கலந்த உலோகம்.
வெண்கலம்—செம்பும் வெள்ளீயமும் கலந்த உலோகம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. உலோகங்கள் என்பன யாவை?
2. அவை எங்கிருந்து எடுக்கப்படுகின்றன ?
3. பொன், தங்கம்—வேறுபாடு என்ன ?
4. இரும்பின் நிறம் யாது ? அது ஏன் கருமையாக இருக்கிறது ?
5. எந்தப் பாத்திரங்களில் ஈயம் பூசவேண்டும்? ஏன்?
6. கால் கொலுசு, காசுமாலை, தவலை, செம்பு, லாடம் —இவை எந்த எந்த உலோகங்களைக் கொண்டு செய்யப் படுவன ?

II. 1. பிரித்து எழுது :—

மதிப்புடையது, மதிப்புக்குறைந்தது.

2. வருதல், போதல், நிற்றல், படித்தல், சுண்டல், பொங்கல், வற்றல், நீளல், சுருங்கல், தூங்குதல்—என்பவை தொழில்களுக்குப் பெயர்களாய் வருவன ; ஆதலால் **தொழிற் பெயர்கள்** எனப்படும்.



## 9. பாரதியார்

1. பாரதியார் தமிழ்ப் பாவலர். பாட்டுகள் செய்பவர் பாவலர் என்று சொல்லப் படுவார். பாரதியார் பாடல்கள் எல்லாத் தமிழ்ப் பாட நூல்களிலும் காணலாம். எல்லோரும் அவற்றைப் பாடுகின்றனர். நீங்கள் முதல் இரண்டு வகுப்புகளில் அவர் பாடல்களைப் படித் தீர்கள் அல்லவா?

2. பாரதியார் தமிழ் நாட்டில் எட்டையபுரம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தகப்பனர் ஒரு தமிழ்ப் புலவர். அவர் பாரதியாருக்குத் தமிழ் நூல்களைக் கற்பித்தார். பாரதி

யார் சிறுவராக இருந்தபொழுதே பாட்டுகளைப் பாடி வந்தார்.

3. அவர் சென்னையில் பத்திரிகை ஆசிரியராய் இருந்தார். அவர் கட்டுரைகள் எழுதுவதிலும் சமர்த்தர். அவர் நாட்டுப்பற்று உடையவர். நமது நாடு விடுதலை பெற வேண்டும் என்பது அவர் ஆவல். அதற்காக அவர் பல பாடல்களைப் பாடினார்.

4. 'நாம் எல்லோரும் இந்த நாட்டில் பிறந்தவர்கள். ஆதலால் நாம் எல்லோரும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப்போல ஒற்றுமையாக வாழவேண்டும்,' என்று பாரதியார் பாடினார்.

5. 'பெண்களும் ஆண்களைப் போலப் படிக்க வேண்டும்; பல வேலைகளைச் செய்ய வேண்டும். அப்பொழுது ஒவ்வொரு குடும்பமும் சுகமாக இருக்கும்,' என்பது பாரதியார் எண்ணம். அவர் பெண்கள் முன்னேற்றம் பற்றிப் பல பாடல்கள் பாடினார்:

6. தமிழில் பாரதியாருக்கு மிகுந்த பற்று உண்டு; 'தமிழ் நன்றாய் வளரவேண்டும்; எல்லோரும் தமிழ் படிக்கவேண்டும்; தமிழ்ப் புத்தகங்கள் பெருகவேண்டும்,' என்று சில பாடல்கள் பாடினார். அவர் சிறந்த பாவலர். நாம் அவரைப் பாராட்டுகிறோம்.

## அருஞ்பொருள்

கட்டுரை - எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றி ஒழுங்காகக் கோத்து எழுதப்பட்ட செய்தித் திரட்டு. நாட்டுப் பற்று - தேசபக்தி. ஆவல் - ஆசை. முன்னேற்றம் - மேல் நிலை அடைதல்.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. பாரதியார் யார்? அவர் எந்த ஊரில் பிறந்தவர்?
2. அவர் எவற்றைப் பற்றிப் பாடல்கள் செய்தார்?
3. நாம் ஏன் அவரைப் பாராட்டுகிறோம்?

II. 1.

| | | | |
|---|---|---|---|
| சுகம் | × | துக்கம் | இவை எதிர்ச்சொற்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல். |
| பல | × | சில | |
| பெருக | × | சுருங்க | |
| மிகுந்த | × | குறைந்த | |

2. பற்று, ஆவல், பாவலர், முன்னேற்றம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. புத்தகம், எட்டையபுரம், நேற்று, தலை, பசுமை, இறத்தல்—இவை என்ன பெயர்கள்?

4. பாடுவோம், கூறுவோம், கூடுவோம்—இவற்றுள் தக்கதைக் கோடிட்ட ஒவ்வோர் இடத்திலும் அமைத்துப் படி :—

(1) நாங்கள் இசையுடன்——.
(2) நாங்கள் படிப்பகத்தில்——.
(3) நாங்கள் பதில்——.



## 10. எங்கள் கிராமம்

1. எங்கள் கிராமம் பெரிய கிராமம். அதில் பன்னிரண்டு தெருக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தெருவிலும் பலவகை வீடுகள் இருக்கின்றன. கிராமத்தில் ஏறக்குறைய அறுநூறு மக்கள் வாழ்கிறார்கள்.

2. கிராமத்தில் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அதில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. ஆசிரியர் ஐவர் இருக்கின்றனர். நூற்றைம்பது பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களில் எண்பது பேர் பெண்கள்.

3. கிராமத்தில் நான்கு கோவில்கள் இருக்கின்றன. ஒன்று சிவன் கோவில்; மற்றொன்று பெருமாள் கோவில்; வேறொன்று

1868—3

மாதா கோவில் ; இன்னொன்று மசூதி. எங்கள் கிராமத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர், முஸ்லிம் கள் இருக்கிறார்கள்.

4. ஊரில் பலர் பயிர்த்தொழில் செய்கிறார் கள். சிலர் நெசவுத் தொழில், பாய் பின்னுதல், கூடை முடைதல், தோட்டத் தொழில் இவற்றைச் செய்கிறார்கள். சிலர் பால் பண்ணை வைத்து நடத்துகிறார்கள். கிராமத் தொழி லாளிகளும் இருக்கிறார்கள்.

5. ஊரார் பல தொழில்களைச் செய்கிறார் கள். ஆயினும் ஒற்றுமையாய் வாழ்கிறார்கள். எல்லோரும் கலந்தே ஊர்ப் பொது வேலைகளைச் செய்கிறார்கள். பாதைகள் சுத்தமாய் இருக் கின்றன ; குளங்கள் சுத்தமாய் இருக்கின்றன. ஒற்றுமை ஊரைப் பெருமைப்படுத்துகிறது.

### அரும்பொருள்

ஏறக்குறைய - சுமார். மாதா கோயில் - கிறிஸ்தவர் கோயில். மசூதி - முஸ்லிம்கள் தொழுகை இடம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. கிராமத்தில் உள்ள தெருக்கள் எத்தனை ? வீடுகள் எத்தனை ?

2. ஊரார் தொகை என்ன ?

3. ஊரில் இருப்பவர் யாவர் ?

4. அவர்கள் செய்யும் வேலைகள் எவை ?

5. ஊரார் எப்படி வாழ்கிறார்கள் ?

II. 1. வரிசை, பொதுவேலைகள், ஒற்றுமை, பால் பண்ணை —இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. பெண்கள் படிப்பதால் என்ன நன்மைகள் உண்டாகும் ? நீ அறிந்தவரை பதில் சொல்.

3. நீ அறிந்த சில கைத்தொழில்களைச் சொல்.

4. **இருக்கிறது—இருக்கின்றன—இருக்கிறார்கள்**

இவற்றில் தக்கதைக் கோடிட்ட ஒவ்வோர் இடத்தில் அமைத்துப் படி :—

(1) ஊரில் ஒரு பள்ளிக்கூடம்———.

(2) அதில் ஐந்து வகுப்புகள்———.

(3) ஆசிரியர் ஐவர்———.

5. பிள்ளைகள், பள்ளிக்கூடம், குளங்கள், கோவில்கள், ஆசிரியர்—என்னென்ன பெயர்கள் ? ஒவ்வொன்றும் என்ன எண் ?

6.

| | | |
|---|---|---|
| பெரியது | × சிறியது | இவை எதிர்ச் சொற்கள். இவை போன்ற எதிர்ச் சொற்கள் நான்கு கூறு. |
| பெரிய | × சிறிய | |
| ஆண்கள் | × பெண்கள் | |
| சுத்தம் | × அசுத்தம் | |

7. ஒருவர், இருவர், மூவர், நால்வர், ஐவர், அறுவர், எழுவர், எண்மர், ஒன்பதின்மர், பதின்மர்—இவற்றை மனப்பாடம் செய்.

# 11. பாரதியார் பாடல்கள்



# பாரதியார் பாடல்கள்

1. வேத முடையதிந்த நாடு—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு :
சேதம் இல்லாத இந்துஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

(பாப்பா - பாட்டு)

2. கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம்
பேதமை அற்றிடும் காணீர்.

(முரசு)

3. சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொலல் பாவம் ;
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

(பாப்பா - பாட்டு)

### அரும்பொருள்

வேதம் - அறிவு ; வேதநூல்கள். சேதம் - அழிவு. காட்சி - பார்வை. வையம் - உலகம். பேதைமை - அறியாமை. அற்றிடும் - நீங்கிவிடும். மதி - அறிவு. நீதி - ஒழுக்கம்.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. நமது நாடு எப்படிப்பட்டது ?

2. பெண்கள் படிப்பது முக்கியம் என்பதைப் பாரதி யார் எப்படி விளக்கிச் சொல்லுகிறார் ?

3. பாவம் எது ?

4. மேலோர் யார் ?

II. 1. தாழ்ச்சி × உயர்ச்சி
மேலோர் × கீழோர்
பாவம் × புண்ணியம்
} இவை எதிர்ச் சொற்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. நீ படிப்பதால் என்ன நன்மை உண்டாகும் என்பதை விளக்கிச் சொல்.

3. அன்பு, நாடு, பாப்பா, பெண்கள்—என்ன பெயர்கள் ?

4. **பெண்** - இது ஒருத்தியைக் குறிப்பது ஆதலால் **ஒருமை எண்** எனப்படும்.

**பெண்கள்** - இது பல பெண்களைக் குறிப்பது ஆத லால் **பன்மை எண்** எனப்படும்.

நாய் - நாய்கள், வீடு - வீடுகள், பை-பைகள், அரசன் - அரசர்கள் : இவை என்ன எண்கள் ?

5. மேல் பாட்டில் சொல்லப்பட்டுள்ள செய்தியைச் சிறு வாக்கியங்களாகச் சொல்.



## 12. கிராம அதிகாரிகள்

1. படத்தில் நால்வர் இருக்கின்றனர். எழுதிக்கொண்டு இருப்பவர் **கணக்கப் பிள்ளை**. அவருக்கு எதிரில் இருப்பவர் **மணியக்காரரர்**. தரையில் நிற்பவர் இருவர். அவர்களில் ஒருவன் **வெட்டியான்**; மற்றவன் **தலையாரி**.

2. கணக்கப்பிள்ளை ஊர் நிலங்களை வெட்டியானைக் கொண்டு அளப்பார்; அந்த அளவுகளைக் கணக்குப் புத்தகத்தில் எழுது வார்; நிலங்களுக்கு அரசாங்கம் விதித்த வரி யைக் கணக்குவைப்பார்; மணியக்காரரர் தலை யாரியுடன் சென்று வரி வசூலிப்பார். அந்த

வரியைக் கணக்கப்பிள்ளை குறித்துக்கொள் வார்; இந்த எல்லாக் கணக்குகளையும் அரசாங்க அதிகாரிகளுக்குக் காட்டுவார்.

3. மணியக்காரர் வரிவசூல் செய்வார்; பிறப்பு இறப்புக் குறிப்பு எழுதுவார்; சில்லறை வழக்குகளைத் தீர்ப்பார்; வரிவசூலை அரசாங்கப் பண்டாரத்திற்கு அனுப்புவார்; ஊரில் ஒற்றுமை இருக்கப் பாடுபடுவார்; ஊர்ப் பொது வேலை களை முன் நின்று நடத்துவார்.

4. தலையாரி கிராமத்தைக் காவல் புரிவான்; மணியக்காரருடன் வரி வசூலுக்குப் போவான்; கணக்கப்பிள்ளை இடும் பொது வேலைகளைச் செய்வான். வெட்டியான் நிலம் அளப்பான்; மணியக்காரரோ, கணக்கப் பிள்ளையோ இடும் வேலைகளைச் செய்வான். அரசாங்கம் இந்த நால்வருக்கும் மாதந்தோறும் சம்பளம் தருகிறது. மணியக்காரரும் கணக்கப் பிள்ளையும் கிராம அதிகாரிகள் என்று அழைக் கப்படுவார்கள்.

### அரும்பொருள்

சில்லரை வழக்குகள் - சிறிய வழக்குகள். பண்டாரம் - கஜானா, பணம் வைத்துப் பாதுகாக்கும் இடம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. கிராம அதிகாரிகள் யார்?
2. கணக்கப் பிள்ளையின் வேலைகள் எவை?

3. மணியக்காரர் செய்யும் வேலைகள் எவை?

4. வெட்டியான் வேலை என்ன?

5. தலையாரியின் வேலைகள் எவை?

II. 1. அதிகாரி, பண்டாரம், சம்பளம், சில்லறை— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. பிறப்பு × இறப்பு, அதிகாரி × வேலையாள் — இவை எதிர்ச் சொற்கள். இவற்றைப் போல நான்கு கூறு.

3. ஏற்ற சொற்களைச் சேர்த்துப்படி :—

| | |
|---|---|
| கணக்கப்பிள்ளை | நிலம் அளப்பான் |
| மணியக்காரர் | காவல் புரிவான் |
| தலையாரி | வரி வசூலிப்பார் |
| வெட்டியான் | கணக்கு எழுதுவார் |

4. கிராமம், தலையாரி, நிலம், வருதல், காலை, வெண்மை—இவை என்ன பெயர்கள்?

5. வழக்கு, நிலங்கள், வெட்டியான், ஊரார்— ஒருமை, பன்மை கூறு.

6. கண்ணன் **படித்தான்**, கமலம் **பாடினாள்**— இவற்றில் படித்தான், பாடினாள் என்னும் சொற்கள் கண்ணன் செய்த தொழிலை (**வினை**யை)யும் கமலம் செய்த தொழிலை (**வினை**யை)யும் குறிப்பவை. இப்படி வினையைத் தெரிவிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

படித்தான், படிக்கிறான், படிப்பான்
பாடினாள், பாடுகிறாள், பாடுவாள் } —**வினைச்சொற்கள்**

# 13. காக்கையும் நரியும்

(கதைப் படம்)



## பயிற்சி

I. படம் பார்த்துக் கீழ்வரும் சொற்களின் துணையைக் கொண்டு கதை சொல்.

கிழவி—வடை — திரும்பினுள் — காக்கை — கௌவிக் கொண்டு — நரி — பாட்டுப்பாடு என்று வேண்டிக் கொண்டது — பாட — வாயைத் திறந்தது — கீழே விழுந்தது — ஓடிவிட்டது.

II. விடை கூறு :—

1. கிழவி என்ன செய்துகொண்டிருந்தாள் ?
2. காகம் எப்படி வடையைத் திருடியது ?
3. நரி காகத்தை என்ன செய்யும்படி வேண்டிக் கொண்டது ? ஏன் ?
4. நரியின் தந்திரம் எவ்வாறு பலித்தது ?
5. நீ இக்கதையிலிருந்து என்ன தெரிந்து கொள்கிருய் ?

III. 1. இக்கதையைக் கிழவி சொல்வது போலச் சொல்.
2. இக்கதையைக் காகம் கூறுவதுபோலக் கூறு.
3. இக்கதையை நரி சொல்வதுபோலச் சொல்.

IV. தடித்த சொற்கள் இன்ன சொற்கள் என்பதைக் கூறு :—

1. வரதன் **ஆடு** வளர்க்கிருன் ; நீ அவனுடன் **ஆடு**.
2. பரந்தாமன் படும்**பாடு** அதிகம்; நீ பாட்டுப் **பாடு**.
3. கூரையின்மீது இருப்பது **ஓடு** ; நீ வேகமாக **ஓடு**.




# 14. கிராமக் கைத்தொழில்

(பால் பண்ணை)

1. எங்கள் கிராமத்தில் நூறு பசுக்கள் இருக்கின்றன. எங்கள் ஊரில் **அருமைநாயகர்** என்று ஒரு பெரியவர் இருக்கிறார். அவரிடம் நாற்பது பசுக்கள் இருக்கின்றன. அவர் பசுக்கள் வைத்திருந்தவருடன் கலந்து பேசினார்; எல்லாப் பசுக்களையும் தமது மேற்பார்வையில் வைத்துக்கொண்டார்.

2. அருமைநாயகர் ஊரார் சம்மதத்தின் மீது ஒரு பெரிய திடலில் கீற்றுக் கொட்டகை ஒன்றை அமைத்தார்; அதில் நூறு பசுக்களும் தங்க வசதி செய்தார்; பசுக்களை மேய்க்கவும் குளிப்பாட்டவும் தீனி போடவும் ஆட்களை

அமர்த்தினர் ; நல்ல புல், வைக்கோல், பருத்திக் கொட்டை, பிண்ணுக்கு முதலியவற்றை நாள் தோறும் குறைவின்றிக் கொடுத்துவருகிறர்.

3. பசுக்கள் பகலில் புல்வெளிகளில் மேய் கின்றன ; பலவகைத் தீனிகளைத் தின்கின்றன; பால் நிரம்பக் கறக்கின்றன. அரியநாயகர் பாலைப் பெரிய பாத்திரங்களில் பத்திரப்படுத் திப் பக்கத்து நகரத்திற்கு அனுப்புகிறர். இந்த வேலை, காலை மாலைகளில் நடைபெறுகிறது.

4. மீதமுள்ள பாதிப் பாலில் ஒரு பகுதி யை ஊரார் வாங்குகின்றனர். மிகுந்ததைக் காய்ச்சித் தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பவை தயாரிக்கப்படுகின்றன. அவை உள் ளூரிலும் வெளி ஊரிலும் செலவாகின்றன. பால் தண்ணீர்க் கலப்பு இல்லாதது. தயிர், மோர் முதலியனவும் சுத்தமாய் இருக்கின்றன.

5. அருமை நாயகர் நடத்திவரும் பால் பண்ணையால் மிகுந்த லாபம் கிடைக்கிறது. பசுக்களின் சொந்தக்காரர் பசு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு இத்தனை ரூபாய் என்று பெறு கின்றனர். பக்கத்து நகரத்தாரும் நல்ல பால், தயிர், மோர், நெய் இவற்றைப் பெறுகின்றனர். பசுக்கள் நோய் இன்றிச் சுகமாய் இருக் கின்றன. எல்லோரும் அருமை நாயகரைப் பாராட்டுகிறர்கள்.

உங்கள் ஊரில் பால் பண்ணை உண்டா?

### அரும்பொருள்

திடல் - மைதானம்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. அருமை நாயகர் எப்படிப்பட்ட பால் பண்ணை வைத்தார் ?

2. அவர் செய்த ஏற்பாடுகள் எவை ?

3. அவரை எல்லோரும் பாராட்டுகின்றனர்.—ஏன் ?

II. 1. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி :—

| | |
|---|---|
| அருமை நாயகர் | நிரம்பக் கறக்கின்றன. |
| பசுக்கள் | பால் பண்ணை நடத்துகிருர் |
| திடலில் | மிகுந்த லாபம் கிடைக்கிறது |
| பால் பண்ணையால் | கொட்டகை இருக்கிறது |

2. தண்ணீர், திடல், காலை, கருமை, சுண்டல், கால்—இவை என்ன பெயர்கள் ?

3. இருக்கிருர், கிடைக்கிறது, பெறுகின்றனர், மேய்கின்றன—இவை என்ன சொற்கள் ?

4. பசுக்கள், கறக்கின்றன, அருமை நாயகர், நடத்துகிருர்—இவை என்னென்ன சொற்கள் ?

5. பசு மேய்கிறது - ஒருமை.
பசுக்கள் மேய்கின்றன - பன்மை.
பையன் வருகிருன் - ஒருமை.
பையன்கள் வருகிருர்கள் - பன்மை.



## 15. பிரயாண வசதி

1. இக்காலத்தில் தரைப் பிரயாணம், கடல் பிரயாணம், ஆகாயப் பிரயாணம் என்று மூன்று வகைப் பிரயாண வசதிகள் இருக்கின்றன. மாட்டு வண்டி, குதிரை வண்டி, மோட்டார் வண்டி, மோட்டார் பஸ், இரயில் வண்டி என்பன தரைப் பிரயாணத்திற்கு உதவி செய்கின்றன.

2. ஒரு நாட்டிலிருந்து கடலுக்கு அப்பால் இருக்கும் நாட்டுக்குச் செல்லக் கப்பல் உதவி யாய் இருக்கிறது. நூற்றுக்கணக்கான பிர யாணிகளை ஏற்றிச் செல்லும் பெரிய கப்பல்

களும் இருக்கின்றன. அவை பல ஆயிரம் மைல்கள் கடலில் செல்லத்தக்கவை.

3. இரயிலில் அல்லது கப்பலில் போவதை விடச் சுருங்கிய கால அளவில் ஆகாய விமானத்தில் போகலாம். ஆகாய விமானத்தில் நூற்றுக் கணக்கானவர் போக முடியாது ; சிலரே போகலாம். மிகவும் அவசரமாய்ப் போக விரும்புவோர் ஆகாய விமானத்திற் செல்வர்.

4. ஒரு நாட்டின் உட்பகுதியில் இரயில் வண்டியும் மோட்டார் பஸ்ஸும் சிறந்த பிரயாண வசதியைச் செய்து தருகின்றன. இரயிலிலும் மோட்டார் லாரியிலும் பல ஊர்களுக்குப் போகவேண்டும் சாமான்கள் அனுப்பப்படுகின்றன. இதனுல் எல்லா நகரங்களிலும் எல்லா வகைப் பொருள்களும் கிடைக்க வசதி ஏற்பட்டிருக்கிறது. நாம் அயல் ஊர்களில் உள்ள நம் உறவினர்க்கு எழுதும் கடிதங்கள் இரயிலில் பிரயாணமாகிக் குறித்த காலத்தில் அவர்களுக்குப் போய்ச் சேருகின்றன.

### அரும்பொருள்

சிறந்த - மேலான. லாரி - சாமான்கள் ஏற்றிச் செல்லும் மோட்டார் வண்டி.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. மூன்று வகைப் பிரயாண வசதிகள் எவை ?

2. தரைப் பிரயாணத்திற்கு உதவி செய்கின்றவை எவை?

3. எவை கடல் பிரயாணத்திற்கு உதவுகின்றன?

4. ஆகாய விமானம் எப்படி உதவுகிறது?

5. சாமான்களை ஏற்றிச் செல்பவை எவை?

II. 1. சிறந்த, வசதி, பிரயாணம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) கப்பல் —— போவது.
(2) இரயில் —— போவது.
(3) ஆகாய விமானம் —— போவது.
(4) மோட்டார் —— போவது.

3. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| (1) கப்பல் | தரைமீது செல்லும் |
| (2) இரயில் | ஆகாயத்தில் செல்லும் |
| (3) ஆகாய விமானம் | கடலில் செல்லும் |
| (4) மோட்டார் | தண்டவாளத்தின்மீது செல்லும் |

4. இப்பாடத்தில் உள்ள பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர்களைக் குறிப்பிடுக.

5. இப்பாடத்திலிருந்து பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

1868—4

# 16. மழை



# மழை

சோழனது சீமையிலே சொரிந்ததே நல்லமழை ;
நல்லமழை பெய்ததனுல் நாடு செழித்ததம்மா !
பூமி குளிர்ந்ததே ; பொய்கைகள் நிரம்பினவே ;
ஏரிகள் நிரம்பினவே ; எதிர்த்ததே ஏகவெள்ளம்.
ஆறுகள் நிரம்பினவே ; அணைகள் அழிந்தனவே ;
குளங்கள் நிரம்பினவே ; குதித்தன மீன்கள் எல்லாம்.
தருக்கள் தளிர்த்தனவே ; தாமரைகள் பூத்தனவே ;
வயல்கள் நிரம்பினவே ; வாய்க்கால் நிரம்பினவே ;
செடிகள் கொடிகள் எல்லாம் செழிப்பாய்த் தளிர்த்தன
செந்நெல் விளைந்ததுவே; தேசம் செழித்ததுவே; [வே.
பயிர்கள் விளைந்தனவே ; பலனைக் கொடுத்தனவே.
வயலைஉழும் மக்களெல்லாம் வாழ்த்திமழைப் பொங்க
[லிட்டார்.

—அல்லி அரசி மாலை

### அரும்பொருள்

சீமை - நாடு. பொய்கை - குளம். ஏக - அதிகமான. தரு - மரம்.

### பயிற்சி

I. விடை கூறு :—
1. மழை நீர் எங்கு நிரம்பினது ?
2. மழையால் தளிர்த்தவை எவை ?
3. உழவர் பொங்கலிட்டனர். —ஏன் ?
4. மழையால் உண்டாகும் நன்மைகள் எவை ?

II. 1. இப்பாடத்தில் உள்ள வினைச்சொற்களைக் கூறு.
2. இப்பாடத்தில் உள்ள இடப்பெயர்களைச் சொல்.

# 17. கடிதங்கள்

## 1. ஆசிரியருக்குக் கடிதம்

117, தம்புசெட்டித் தெரு,
சென்னை.
20—9—'49.

மூன்றும் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு
வணக்கம்.

அம்மையீர்,

நாளை வெள்ளிக்கிழமை என் அக்காளுக்குத் திருமணம் நடைபெற இருப்பதால், நாளை எனக்கு விடுமுறை தரும்படி வேண்டுகிறேன். வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவி,
க. தமிழரசி

மு. கதிர்வேலன்
(தகப்பனார் கையெழுத்து)

திருவாட்டி
ப. அழகம்மையார் அவர்கள்,
மூன்றும் வகுப்பு ஆசிரியர்,
நடராஜர் பெண்கள் பள்ளி,
தம்புசெட்டித் தெரு,
சென்னை.

## 2. நண்பனுக்குக் கடிதம்

10, வள்ளுவர் தெரு,
இராயபுரம், சென்னை,
25—9—'49.

அன்புள்ள நண்பா,

இங்கு எல்லோரும் நலம். அங்கு உன் நலத்தையும் உன் பெற்றோர் நலத்தையும் அறிய ஆவல். நீ, வரும் கிறிஸ்மஸ் விடுமுறையில் சென்னைக்கு வா; இங்கு நடக்கும் வேடிக்கைகளைப் பார்க்கலாம்; சென்னை நகரத்தையும் பார்க்கலாம். நான் உன் பதிலை எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள நண்பன்,
நக்கீரன்

திருவாளர்
க. செங்குட்டுவன்,
மூன்றும் வகுப்பு மாணவன்,
வள்ளுவர் பாடசாலை,
செம்பாக்கம்,
செங்கற்பட்டு ஜில்லா.

## பயிற்சி

1. 'காய்ச்சல் - விடுமுறை வேண்டும்' என உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

2. ஆசிரியருடன் மகாபலிபுரம் போகவேண்டும்—அநுமதியும் பணமும் தேவை'—என வெளியூரில் உள்ள உன் தகப்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

3. உன் பள்ளியின் சிறப்பைப் பற்றி வெளியூர் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

4. நீ கால் வருடத் தேர்வில் (பரீட்சையில்) எவ்வாறு எழுதினாய் என்பதைப்பற்றி உன் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுது.

5. இரண்டு கடிதங்களிலும் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

6. (1) **படித்தான்**—வினை நடந்து விட்டதைத் தெரிவிப்பது ; **இறந்தகாலம்** எனப்படும்.

(2) **படிக்கிறான்**—வினை நிகழ்வதை (நடக்கின்றதை)த் தெரிவிப்பது ; **நிகழ்காலம்** எனப்படும்.

(3) **படிப்பான்**—வினை இனிமேல் நடப்பதைத் தெரிவிப்பது ; **எதிர்காலம்** எனப்படும்.

1. மேல் தரப்பட்ட கடிதங்களில் உள்ள வினைச் சொற்களின் காலங்களைச் சொல்.

2. 15-ஆம் பாடத்தில் உள்ள வினைச்சொற்களின் காலங்களைச் சொல்.

3. 16-ஆம் பாடத்தில் உள்ள வினைச்சொற்களின் காலங்களைக் கூறு.




## 18. கடிதத்தின் பிரயாணம்

(உரையாடல்)

**கண்ணன்** —அக்கா, அப்பா மதுரையிலிருந்து எழுதிய கடிதமா இது? இது எங்கே விற்பனைக்குக் கிடைக்கிறது?

**கமலம் :**—ஆம். இக்கார்டு அஞ்சல் நிலையத்தில் விற்பனைக்குக் கிடைக்கிறது. ஒரு கார்டின் விலை முக்கால் அணு. மிகுதியாக எழுதவேண்டும் செய்திகள் இருந்தால், கடிதத்தில் எழுதி உறைக்குள் போட்டு அனுப்பலாம். தபால் உறையின் விலை இரண்டு அணு.

**கண்ணன் :**—இக்கடிதம் எப்படி இங்கு வந்தது ?

**கமலம் :**—அப்பா நேற்று இக் கடிதத்தை எழுதினர் ; அஞ்சல் நிலையத்தில் உள்ள பெட்டியில் போட்டார். மாலையில் அஞ்சல் நிலைய வேலையாள் பெட்டியில் போடப் பட்ட கடிதங்களை எல்லாம் எடுத்தார் ; ஒவ்வொன்றின்மீதும் மதுரை என்னும் ஊர்ப்பெயரும் நேற்றைய தேதியும் குறித்த முத்திரையிட்டார் ; கடிதங்களை ஒரு பை யில் போட்டுக் கட்டினர். வேருெரு வேலை யாள் அந்தப் பையைப் புகைவண்டி நிலையத்துக்குக் கொண்டுபோனர்.

**கண்ணன் :**—புகைவண்டி நிலையத்துக்கு ஏன் கொண்டுபோகவேண்டும் ?

**கமலம் :**—மதுரையிலிருந்து புறப்பட்டுச் சென்னை வரும் புகைவண்டியில் அஞ்சல் வண்டி என்னும் தனிவண்டி ஒன்று உண்டு. அந்த வண்டியில் அஞ்சல்

பைகள் ஏற்றப்படும். அந்த வண்டியில் அஞ்சல் வேலை பார்ப்பவர்கள் இருப்பார்கள். அவர்கள் வண்டி போகும் பொழுதே கடிதங்களில் எழுதப்பட்டுள்ள ஊர்ப் பெயர்களைப் பார்த்துப் பிரித்து வைப்பார்கள்; ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் வண்டி நிற்கும்பொழுது, அந்த நிலையம் உள்ள ஊருக்கு உரிய கடிதப் பையைக் கொடுத்துவிடுவார்கள். அவ்வாறே நமது ஊர் நிலையத்தில் ஒரு அஞ்சல் பை இன்று காலை அஞ்சல்காரரிடம் கொடுக்கப்பட்டது.

**கண்ணன்** :—அவர் அப்பையை என்ன செய்தார்?

**கமலம்**:—அவர் நம்மூர் அஞ்சல் நிலையத்திற்கு அப்பையைக் கொண்டுவந்தார், வேறொருவர் நம்மூர்ப் பெயரும் இன்றைய தேதியும் உள்ள முத்திரையை ஒவ்வொரு கடிதத்தின் மீதும் இட்டார். அக்கடிதங்களை ஊரின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று கொடுக்க அஞ்சல்காரரர் பலர் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் நம் தெருவுக்கு வருபவர். அவர் இந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து நம்மிடம் கொடுத்தார். இதில் மதுரை முத்திரையும் நம்மூர் முத்திரையும் இருப்பதைப் பார்.

146193 600

**கண்ணன் :**—அக்கா, நாம் ஓர் ஊரிலிருந்து புறப்பட்டு வருவது போலவே, நாம் எழுதும் கடிதமும் பிரயாணம் செய்கிறது போலும் !

**கமலம் :**—ஆம். புகைவண்டி இல்லாத இடங்களில் அஞ்சல் மோட்டார் மூலம் கடிதங்கள் பிரயாணம் செய்கின்றன.

### அரும்பொருள்

விற்பனை - விலைக்கு விற்றல். அஞ்சல் - தபால். அஞ்சல் நிலையம் - தபால் ஆபீஸ். அஞ்சல்காரர் - தபாற்காரர். அஞ்சல் பை - தபால் பை. அஞ்சல் மோட்டார் - தபாற் பைகளைக் கொண்டு செல்லும் 'தபால் மோட்டார் வண்டி'.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. கார்டின் விலை என்ன ? உறையின் விலை என்ன ?

2. மதுரையில் எழுதப்பட்ட கடிதம் சென்னைக்கு எப்படி வந்தது ?

3. புகைவண்டி போகாத இடங்கட்கு அஞ்சல் எவ்வாறு கொண்டு செல்லப்படுகிறது ?

II. '**வண்டித் தொடர்**' என்பது பல வண்டிகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து இருப்பதால் வந்த பெயர். '**மலைத் தொடர்**' என்பது பல மலைகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து இருப்பதால் வந்த பெயர். இவ்வாறே பல சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து இருப்பதைச் **சொல் தொடர்** என்னலாம்.

கண்ணன் பாடம் படித்தான்—சொல் தொடர்.

கமலம் பாட்டு பாடுகிறாள்—சொல் தொடர்.

## 19. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அதிக ஆசை அதிக நஷ்டம்.
3. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
4. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
6. உருவத்தைக் கண்டு ஒருவரையும் இகழாதே.
7. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
8. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
9. ஒன்றைச் செய்யினும் நன்றே செய்.
10. ஓதுவார் எல்லாரும் உழுவார் தலைக் கடையில்.
11. கடன் இல்லாக் கஞ்சி கால் வயிறு போதும்.
12. கந்தை ஆயினும் கசக்கிக் கட்டு.
13. காலை மாலை நூலை ஓது.
14. கூழே ஆயினும் குளித்துக் குடி.
15. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
16. மனக் கவலை பலக் குறைவு.

17. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

18. பணம் இல்லாதவன் பிணம்.

19. பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே.

20. பருவத்தே பயிர் செய்.

### அரும்பொருள்

பழமொழி - நாட்டில் நீண்டகாலமாக வழங்கும் அனுபவ மொழிகள். அகம் - உள்ளம், மனம். சிலை - கல். தலைக்கடை - வாசற்படி.

### பயிற்சி

1. உனக்குத் தெரிந்த வேறு பழமொழிகள் நான்கு கூறு.

2. கண்ணன் படித்தான், கண்ணன் படித்து - இவை இரண்டும் சொல்தொடர்களே. ஆயினும், **கண்ணன் படித்தான்** - என்பது **கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர்.** கண்ணன் படித்து - என்பது கருத்து முடியாத சொற்றொடர். கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர்க்குப் பின் **முற்றுப்புள்ளி** இடவேண்டும். கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர் **வாக்கியம்** என்றும் சொல்லப்படும்.

வரதன் நன்கு விளையாடினான்.
கமலம் நன்கு பாடினாள்.
கந்தன் பாடம் படிக்கிறான்.—
இவை வாக்கியங்கள்.




## 20. அறிவுரை

1. பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா ;
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.
2. துன்பம் நெருங்கிவந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா ;
**அன்பு** மிகுந்ததெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.
3. சோம்பல் மிகக்கெடுதி பாப்பா ;—தாய்
சொன்னசொல்லைத் தட்டாதே பாப்பா ;
தேம்பி அழுங்குழந்தை நொண்டி ;—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

4. உயிர்க ளிடத்தில் அன்பு வேண்டும் ;—
தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும் ;
வயிர முடைய நெஞ்சு வேண்டும் ;—இது
வாழும் முறைமையடி பாப்பா.

—பாரதியார்

## அரும்பொருள்

அறிவுரை - அறிவை வளர்க்கும் சொல். புறம் - கோள். திடம் - அஞ்சாமை, பலம். வயிரம் - உறுதி.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. சொல்லக்கூடாதவை எவை ?
2. எது மிகக் கெடுதி ?
3. யார் சொல்லைத் தட்டலாகாது ?
4. ‘ இது வாழும் முறைமை ’.—எது ?
5. தெய்வம் என்ன செய்யும் ?

II. 1. இப்பாடல்களின் கருத்தைச் சொல் ; பிறகு எழுது.

2. புறம், துன்பம், சோம்பல், சோர்ந்துவிடல்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3.

| | | |
|---|---|---|
| துன்பம் | × | இன்பம் |
| கூடும் | × | கூடாது |
| ஆகும் | × | ஆகாது |
| தட்டு | × | தட்டாதே |
| கெடுதி | × | நன்மை |

இவை எதிர்ச்சொற்கள். கீழ் வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்களைக் கூறு :—

போராடு, விடு, நட.

4. நீ உன் தாயார் சொற்படி என்னென்ன வீட்டு வேலைகளைச் செய்கிறாய் ? (உன் பதிலை எழுது.)



## 21. தெருவில் நடந்த நிகழ்ச்சி

1. சுந்தர பாண்டியன் என்பவன் மூன்ருைம் வகுப்பு மாணவன். அவன் வீடு இருந்த தெரு குறுகலானது. ஆயினும் அத்தெருவில் சைக்கிள், மோட்டார் வண்டிகள் மிகுதியாய்ப் போதலும் வருதலும் உண்டு. அதனுல் தெருவில் இறங்கி விளையாடக்கூடாது என்று சுந்தர பாண்டியனுக்கு அவன் தந்தையார் எச்சரிக்கை செய்தார்.

2. சுந்தர பாண்டியன் வீட்டில் தோட்டம் இல்லை. வீட்டில் விளையாட இடம் இல்லை. அதனுல் அவன் தெருத்திண்ணையில் விளையாடுவது வழக்கம். ஒரு நாள் அவன் வகுப்பு மாணவர் இருவர் அவன் வீட்டுக்கு வந்தனர்.

பாண்டியன் அவர்களுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தான்.

3. மூவரும் தம்மை மறந்து விளையாடத் தொடங்கினர். தெருவைத் தாண்டி எதிர்வீட்டுச் சுவரைத் தொட்டுவிட்டு ஓடிவரும் ஆட்டத்தில் மூவரும் இறங்கினர். பாண்டியன் தந்தையார் எச்சரிக்கையை மறந்தான்; தெருவைக் கடந்து ஓடினான்; பலமுறை ஓடினான்.

4. பிள்ளைகள் தங்கள் விளையாட்டில் கருத்தைச் செலுத்தினர்; தாங்கள் தெருவின் குறுக்கே ஓடுவதை மறந்தனர். ஒரு பெரிய மாணவன் அப்பொழுது சைக்கிள் வண்டியில் வேகமாய் வந்தான். அவன் வண்டி தெருவின் குறுக்கே ஓடின சுந்தர பாண்டியன்மீது மோதியது. பாண்டியன் கீழே விழுந்தான்; சைக்கிள் ஓட்டிய மாணவனும் கீழே விழுந்தான். வண்டி தாக்கியதில் பாண்டியன் காலில் பலத்த அடி பட்டது.

5. அந்தக் காயம் ஆற ஒரு மாதம் பிடித்தது. சுந்தர பாண்டியன் அந்த ஒரு மாதத்தில் பட்ட வேதனை மிகுதியாகும். அவன் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தெருவில் விளையாடுவதை நிறுத்தினான்; தெருவில் கவனத்துடன் நடக்கலானான்; 'வழியைப் பார்த்து நட' என்று தன் நண்பர் ஒவ்வொருவரையும் எச்சரிக்கலானான்.

## அரும்பொருள்

எச்சரிக்கை - முன்னதாகவே வருவது கூறி அறிவுறுத்தல்.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. சுந்தர பாண்டியன் தந்தையார் தந்த எச்சரிக்கை யாது ?

2, பாண்டியன் அதனை எப்பொழுது மறந்தான் ?

3. மறந்ததால் அவன் பட்ட துன்பம் யாது ?

4. பிறகு அவன் எவ்வாறு திருந்தினான் ?

5. இந்நிகழ்ச்சியிலிருந்து நீ அறியும் படிப்பினை யாது ?

II. 1. ஆற, மிகுதி, மோதுதல், வேதனை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. மிகுதி, அதிகம்—ஒரே அர்த்தம் உடையவை.
வேதனை, துன்பம்—ஒரே அர்த்தம் உடையவை.
இவற்றை நினைவில் வை.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) பனைமரம் நிழலைத்——. (தரும், தராது)
(2) ஆலமரம் நிழலைத்——. (தராது, தரும்)
(3) பரந்தாமன் பாடம்——. (போடுகிறான், படிக்கிறான்)
(4) கமலம் கோலம் ——. (பாடுகிறாள், போடுகிறாள்)




## 22. வழியைப் பார்த்து நட

1. பெரிய நகரங்களில் சைக்கிள் வண்டிகள், மோட்டார் வண்டிகள், ரிக்ஷா வண்டிகள், சாமான்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரிகள், குதிரை வண்டிகள் முதலியன எப்பொழுதும் தெருக்களில் போய்க்கொண்டு இருக்கும். ஆதலால் தெருக்களில் நடப்பவர் இப்படி இப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சில பாதை விதிகள் ஏற்பட்டு இருக்கின்றன.

2. தெருவில் நடப்பவர் தமது இடக்கைப் பக்கம் தெருவின் ஓரமாக நடந்து போக வேண்டும். பல தெருக்கள் சந்திக்கும் இடங்

களைத் தாண்டும்பொழுது நான்கு பக்கங்களையும் கவனிக்கவேண்டும்; மேல்சொன்ன வண்டிகள் வராதபொழுது தெருவைக் கடக்கவேண்டும். சில சந்திகளில் போலீஸ்காரர் நின்று, 'நில்', 'போ' என்று கையால் குறிப்பார். அக் குறிப்பைக் கவனித்து நடந்துகொள்ள வேண்டும்.

3. வழியில் எச்சில் துப்பலாகாது; வாழைப்பழத் தோலைப் போடக்கூடாது. அது வழியில் இருந்தால் அதனை மிதிக்கக்கூடாது. அது வழுக்கிவிடும்; கீழே விழுந்து ஊனமாகச் செய்யும். ஆதலால் யாராவது போட்டிருந்தால் அதனை எடுத்து எறிதல் நமது கடமையாகும். ஆணி, முள், தகரம் முதலியவை காலில் குத்தினல் கெடுதலைச் செய்யும்; ஆதலால் அவற்றை எடுத்து எறியவேண்டும்.

## அரும்பொருள்

பாதை - வழி. சந்தி - பல தெருக்கள் சந்திக்கும் இடம். ஊனம் - பழுது.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. பெரிய நகரங்களில் தெருக்களில் போய் வருவன யாவை ?
2. நாம் தெருவில் எப்பக்கம் போகவேண்டும் ?
3. தெருவில் கிடப்பவை யாவை ?
4. அவற்றை ஏன் அப்புறப்படுத்தவேண்டும் ?

II. 1. பாதை, சந்தி, ஊனம், கெடுதல்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

(1) வாழைப் பழத்தோல் —. (வழுக்காது, வழுக்கும்)

(2) தெருவில் — பக்கமாக நடக்கவேண்டும். (இடம், வலம்)

(3) ஆணி, முள், தகரம் இவற்றை எடுத்து எறிய—. (வேண்டா, வேண்டும்)

3. இப்பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறு.

4. இப்பாடத்தில் வந்துள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.

5. இப்பாடத்தில் உள்ள வாக்கியங்களில் நான்கு எடுத்து எழுது.

6. இப்பாடத்தில் வந்துள்ள வினைச் சொற்களைக் கூறு.

7. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களை எழுதிக் காட்டு.

8. இதனைப் படி :—

**போ**

(1) பையன் **போகிறான்.**
(2) பெண் **போகிறாள்.**
(3) அவர்கள் **போகிறார்கள்.**
(4) குரங்கு **போகிறது.**
(5) குரங்குகள் **போகின்றன.**

நிலையத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும், அல்லது அழைத்துச் செல்லவேண்டும் என்பது ஒரு விதி.

3. சங்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் திருவிழா நடக்கும் இடங்களுக்குச் செல்வார்கள்; அங்குப் பெற்றோரை விட்டுப் பிரிந்து அழும் பிள்ளைகளைப் போலீசார் வசம் ஒப்பிப்பார்கள்; ஏதேனும் விபத்து ஏற்பட்டால், தங்களால் முடிந்த உதவி செய்வார்கள்.

4. இப்பிள்ளைகள் தங்கள் வீடுகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்கிறார்கள்; சுத்தமான உடைகளை உடுத்துவார்கள்; சுவர்களில் கிறுக்கமாட்டார்கள்; தரையில் காகிதம் முதலியவற்றைப் போடமாட்டார்கள்; புத்தகங்களை அழுக்குப்படாமல் வைத்திருப்பார்கள்; தினந்தோறும் ஓடுதல், ஆடுதல் முதலிய உடற்பயிற்சிகளைச் செய்வார்கள்; தங்களுக்கு நோய் வராமல் பாதுகாப்பார்கள்.

### அரும்பொருள்

மருத்துவ நிலையம் - வைத்திய சாலை. விபத்து - தீய நிகழ்ச்சி.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. செஞ்சிலுவைச் சங்க விதிகள் யாவை?
2. சங்கத்தார் செய்யும் பொது உதவிகள் யாவை?

II. 1. தினந்தோறும், உடற்பயிற்சி, விபத்து, உதவி— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான வற்றைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப் படி :—

| | | | |
|---|---|---|---|
| செய்கிறேன் | செய்கிறோம் | செய்வாய் | செய்வீர்கள் |
| செய்கிறான் | செய்கிறாள் | செய்வார்கள் | ஓடுகிறது |

(1) நான் காகிதக் கப்பல் ——.
(2) நாங்கள் காகிதக் கப்பல்கள் ——.
(3) குப்பன் காகிதக் கப்பல் ——.
(4) நீ காகிதக் கப்பல் ——.
(5) கோமளம் காகிதக் கப்பல் ——.
(6) நீங்கள் காகிதக் கப்பல் ——.
(7) பிள்ளைகள் காகிதக் கப்பல் ——.
(8) பூனை எலி பிடிக்க ——.

3. தடித்த சொற்களில் பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?

(1) மேசை மூன்று **அடி** நீளம்; நீ அவனை **அடி**.
(2) இது குருவிக் **கூடு**; நீ நல்லவரைக் **கூடு**.
(3) மனக் **குறை** கூடாது; ஐந்தில் இரண்டைக் **குறை**.

4. இப்பாடத்தில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.

5. இப்பாடத்தில் உள்ள அறுவகைப் பெயர்களைச் சொல்.



## 24. கிராமத் திருவிழா

1. செங்கற்பட்டு ஜில்லாவில் செம்பாக்கம் என்பது எங்கள் கிராமம். எங்கள் கிராமம் சுற்றுப்புறக் கிராமங்களைவிடப் பெரியது. எங்கள் கிராமத்தில் பெரிய சிவன் கோவில் இருக்கிறது. அது 800 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்று பெரியோர் கூறுகின்றனர்.

2. சித்திரை மாதத்தில் சிவன் கோவில் திருவிழா நடப்பது வழக்கம். அவ்விழா பத்து நாட்கள் நடக்கும். கோவிலுக்கு எதிர்த் திடலில் பலவகைக் கடைகள் வைக்கப்படும். பாத்திரக் கடைகள், ஜவுளிக் கடைகள், மிட்டாய்க் கடை

கள், பட்டாணிக் கடைகள், வளையல் கடைகள், சிற்றுண்டிக் கடைகள் நிறைந்து இருக்கும்.

3. இராட்டினம் சுற்றுவோர், பலவகைப் படங்களைக் காட்டுவோர், வேறு பலவகை வேடிக்கைகளைக் காட்டுவோர் கிராமத்திற்கு வந்துவிடுவர்; இரவு பகல் வேடிக்கைகளைக் காட்டிப் பணம் சம்பாதிப்பர்.

4. சுற்றுப்புறக் கிராமத்தார் நாள்தோறும் நூற்றுக்கணக்கில் வருவர்; கடவுளைக் கும்பிடுவர்; வேடிக்கைகளைப் பார்ப்பர்; தமக்குத் தேவையான பொருள்களை விலைகொடுத்து வாங்கிச் செல்வர்.

5. பத்து நாட்களிலும் கோவில் திருச்சுற்றில் சொற்பொழிவுகள் நடக்கும். சைவ அறிஞர் பலர் வந்து சைவ மதத்தைப் பற்றிப் பேசுவர்; தேவாரப் பாடல்களைப் பாடுவர். ஆடவர்களும் தாய்மார்களும் அங்குக் கூடியிருப்பர்.

6. பத்தாம் நாள் தேர்த் திருவிழா நடைபெறும். பல கிராமத்து மக்கள் வந்து, தேர் வடத்தைப் பற்றி இழுப்பார்கள். சுவாமியும் அம்மனும் தேர்மீது அலங்கரிக்கப்பட்டு இருக்கும். தேர் வரும்பொழுது ஒவ்வொரு வீட்டாரும் தேங்காய் உடைத்துக் கடவுளை வழிபடுவார்கள். இந்தப் பத்து நாள் திருவிழா எங்கள் ஊரில் சிறப்பாய் நடைபெறும்.

## அரும்பொருள்

ஆண்டு - வருஷம். திடல் - மைதானம். திருச்சுற்று - பிராகாரம். சொற்பொழிவு - பிரசங்கம். அறிஞர் - படித்தவர். தேவாரம் - திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் என்னும் சைவமதப் பெரியோர் பாடிய தோத்திரப் பாடல்கள். வடம் - பெரிய கயிறு.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. செம்பாக்கம் எப்படிப்பட்ட கிராமம்?
2. திருவிழாவிற்காக வரும் கடைகள் எவை?
3. அங்குக் காட்டப்படும் வேடிக்கைகள் எவை?
4. கிராம மக்கள் திருவிழாவில் ஏன் கலந்துகொள்கிறார்கள்?
5. கோவில், வழிபாடு, திருவிழா, திருச்சுற்று, அறிஞர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் பயன்படுத்து.
6. இந்தப் பாடத்தில் ஆறு பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பகுதியும் ஒரு **பாரா** எனப்படும். ஆறும் பாராவில் உள்ள பெயர்ச் சொல்—வினைச்சொற்களைக் கூறு.
7. ஐந்தாம் பாராவில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.
8. நான்காம் பாராவில் உள்ள ஆறுவகைப் பெயர்ச் சொற்களையும் சொல்.
9. நீ பரர்த்த கிராமத் திருவிழாவைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.



## 25. குறத்தி குறி கூறல்

[அர்ச்சுனன் கண்ணனுடன் தீர்த்த யாத்திரை செய்ய வந்தான். அப்பொழுது அவன் மதுரையை ஆண்டுவந்த அல்லிராணியை மணந்துகொள்ள விரும்பினுன்; அந்த மணம் கூடுமோ என்று கவலைப்பட்டான். அவன் கவலையைப் போக்கக் **கண்ணன்** குறத்தியாக வந்து, 'திருமணம் கூடும்' என்று குறி கூறிய பகுதி இது.]

1. எங்களது திருநாடு கேட்கிருயோ? தம்பீ!
ஏற்றமுள்ள இந்திரனர் ஆளுவதெம் நாடு.
2. கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு.
குமரேசன் வாழ்வதுவும் எங்கள்மலை நாடு.
3. இராமக்காள் லட்சுமக்காள் பொம்மக்காள் என்பேர்
நலமறிந்து குறியுரைப்பேன் நன்மைபெற நானும்.

4. சந்திரகுல ராஜாக்கள் தருமர் ஐவர் நீங்கள்;
தரணிமுழு தாளுகின்ற தருமர்தம்பி நீதான்.

5. சிலைநுதலன் வடிவழகன் தேர்விஜயன் நீதான்.
தீர்த்தயாத் திரைபோகத் தோழனுடன் வந்தாய்.

6. வடிவழகில் மிக்குடையாள் தென்மதுரை வாழும்
வடிவழகி அல்லியைநீ மணக்கமனம்
கொண்டாய்.

7. திருமணத்தில் அல்லியைநீ மணந்திடுவாய்
தம்பீ !
திருக்கண்ணன் துணைபெற்று வாழ்வாய்நீ தம்பீ!

—அல்லி அரசி மாலை

## அரும்பொருள்

திரு - அழகிய. ஏற்றம் - உயர்வு. குமரேசன் - முருகக் கடவுள்; முருகன் - மலைவாழ் கடவுள். நலம் - நன்மை. ஐவர் - பாண்டவர். கோலம் - அழகு. தரணி - உலகம். சிலைநுதல் - வில் போன்ற நெற்றி.

## பயிற்சி

I. விடை கூறு :—

1. குறி கூறுதல் என்பது யாது ?
2. குறத்தியாக வந்தவன் யார் ?
3. குறத்தி யாருக்குக் குறி கூறினாள் ?
4. அவள் தன்னைப்பற்றி என்ன சொன்னாள் ?
5. அவள் சொன்ன குறி யாது ?

II தம்பீ - **ஆண்பால்**, தங்கை - **பெண்பால்**. (பால் - பிரிவு). குறவன் - ஆண்பால், குறத்தி - பெண்பால். கிழவன், மாமன், தந்தை, அண்ணன் - பெண்பால் கூறு.



## 26. மருத்துவ மனை

1. இது ஒரு மருத்துவமனை. இதற்குத் தலைவர் **மருத்துவர்**. அவர் நோயாளியைச் சோதித்துப் பார்ப்பார்; பிறகு ஒரு சீட்டில் மருந்து எழுதிக் கொடுப்பார். அந்தச் சீட்டை மருந்து கொடுப்பவரிடம் கொடுத்தால், அவர் சீட்டில் உள்ள பல மருந்துகளையும் கலக்கி ஒரு புட்டியில் கொடுப்பார். அப்புட்டியின்மீது நோயாளியின் பெயர், மருந்து சாப்பிடும் நேரம், ஒரு முறை சாப்பிடவேண்டும் மருந்தின் அளவு என்பன எழுதப்பட்டு இருக்கும்.

2. மருத்துவர் நோய் மிகுந்தவர்களை மருத்துவ மனையிலேயே இருக்கச் செய்வார்.

மனையில் அவர்களுக்குக் கட்டில்கள் உண்டு. ஒவ்வொரு கட்டிலின் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டி இருக்கும். அதில் நோயாளி சாப்பிடும் ரொட்டி, பால், பழம், மருந்து என்பவை இருக்கும். ஒவ்வொரு கட்டிலுக்கும் மேல் சுவரில் ஓர் அட்டை தொங்கவிடப்பட்டு இருக்கும். அந்த அட்டையில் ஒரு காகிதம் இருக்கும். அதில் நோயாளியின் பெயர், நோயின் பெயர், நோயின் நிலைமை, மருந்து சாப்பிடும் நேரம், உணவு உட்கொள்ளும் நேரம் முதலியவை எழுதப்பட்டு இருக்கும்.

3. மருத்துவ மனையில் நோயாளிகளைக் கவனிக்கத் **தாதிமார்** இருப்பர். மருத்துவர் காலை-மாலைகளில் மட்டும் வந்து நோயாளிகளைக் கவனிப்பர். மற்ற நேரங்களில் தாதிமாரே நோயாளிகளைக் கவனிப்பர்; மருந்து கொடுப்பர்; பால் முதலியன கொடுப்பர். தாதிமார் நோயாளிகளிடம் அன்போடு நடந்து கொள்வர்.

### அரும்பொருள்

மருத்துவ மனை - வைத்திய சாலை, ஆஸ்பத்திரி. மருத்துவர் - டாக்டர்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. மருத்துவ மனையில் இருப்பவர் யாவர் ?
2. கட்டிலை அடுத்த பெட்டியில் எவை வைக்கப்படும்?

3. அட்டையில் எழுதப்படுபவை யாவை ?

4. தாதிமார் என்ன வேலைகளைச் செய்வர் ?

II. 1. நீ பார்த்த ஒரு மருத்துவ மனையைப் பற்றிய விவரங்களைக் கூறு.

2. தாதிமார், மருத்துவர், நோயாளிகள், மனைகள்— இவற்றுக்கு ஒருமை கூறு.

3. மனை, மருத்துவம், தாதிமார், நோயாளி—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. தாதிமார் மருந்து கொடுப்பர். இது ஒரு வாக்கியம். இதில் **கொடுப்பர்** என்பது வினைச்சொல். இதற்குப் **பயனிலை** என்றும் பெயர் உண்டு. இதற்கு முன் 'யார்' என்னும் சொல்லை வைத்து, 'யார் கொடுப்பர்?' என்று கேள்வி கேட்டுப் பார். 'தாதிமார்' என்பது பதிலாக வரும். அது **எழுவாய்** என்று சொல்லப்படும். பயனிலைக்கு முன் 'எதை' என்பதை வைத்து, 'எதைக் கொடுப்பர்?' என்று கேட்டுப் பார். 'மருந்து' என்பது பதிலாக வரும். அது **செயப்படுபொருள்** என்று சொல்லப்படும். இவ்வாறு வாக்கியத்தில் வரும் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்பவை **வாக்கியத்தின் உறுப்புகள்** எனப் படும்.

5. இப்பாடத்தில் வந்துள்ள ஒவ்வொரு வாக்கியத்தில் இருக்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறுக.

# 27. நாயும் அல்லி மலரும்

(கதைப் படம்)



## பயிற்சி

I. 1. கீழ்வரும் சொற்களைத் துணையாகக் கொண்டு, படம் பார்த்துக் கதை சொல்.

ஓடை - அல்லிமலர் - ஆசிரியர் - பற்களால் கடித்து - வாயில் கௌவிக்கொண்டு - வாலைக் குழைத்து.

2. இக்கதையை எழுது.

II. 1. இக்கதையை ஆசிரியர் கூறுவதுபோலக் கூறு.

2. இக்கதையை நாய் சொல்லுவதுபோலச் சொல்.

III. 1. ஓடை, நாய், ஆசிரியர், தண்டு, பூ, வெண்மை, பறித்தல்—இவை என்ன என்ன பெயர்கள் ?

2. ஓடை, மலர்கள், ஆசிரியர், நாய், தடி, குணங்கள்.—ஒருமை பன்மை கூறு.

3. (1) பூக்கள் ஓடையில் மலர்ந்தன, (2) கந்தன் வடையைத் தின்றான், (3) கமலம் பாடம் படிக்கிறாள்.—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறு.

| வாக்கிய எண் | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

4. 24-ஆம் பாடத்தில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்தில் இருக்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைச் சொல்.

1868—6



# 28. போலீஸ் நிலையம்

முருகன் :—அப்பா, இந்தச் சந்தியில் நிற்கும் இவர் யார்?

தந்தையார் :—இவர் போலீஸ்காரரர்.

முருகன் :—இவர் ஏன் இங்கு நிற்கிறுர்?

தந்தையார் :—இது நாற்சந்தி அல்லவா? இவர் நான்கு பக்கங்களில் இருந்தும் வரும் வண்டிகளையும் போகும் வண்டிகளையும் முறைப்படுத்தி, வரும்படியும் போகும்படியும் செய்வார். இவர் கையை உயர்த்தி வண்டியை நிறுத்துவார்; அதற்கு எதிர்ப் புறத்தில் இருந்து வரும் வண்டியைப்

போகச் செய்வார் ; பிறகு நிறுத்திய வண்டியைப் போக விடுவார். இப்படிச் செய்யாவிட்டால், வண்டிகள் மோதிக்கொள்ளும் ; ஆள் சேதமும் பொருள் சேதமும் ஏற்படும்.

**முருகன்** :—அப்பா, இங்கே பாருங்கள். ஒரு போலீஸ்காரர் ஒருவனைப் பிடித்துக் கொண்டு வருகிறார்.

**தந்தையார்** :—அவன் யார் பையிலாவது கைவிட்டுத் திருட முயன்றிருப்பான் ; அல்லது சண்டையிட்டிருப்பான். அதனால் போலீஸ்காரர் அவனைத் தண்டிக்கப் போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லுகிறார்.

**முருகன்** :—அப்பா, நான் போலீஸ் நிலையத்தைப் பார்க்க வேண்டும்.

**தந்தையார்** :—சரி, வா, போகலாம்.

**முருகன்** :—அப்பா, இதுதான் போலீஸ் நிலையமா ?

**தந்தையார்** :—ஆம். வெளியில் நிற்பவர் போலீஸ் நிலைய அதிகாரி. உள்ளே எழுதிக் கொண்டிருப்பவர் போலீஸ் நிலைய குமாஸ்தா. போலீஸ் சேவகர் சொல்வதையும், பிடிபட்டவன் சொல்வதையும் அவர் எழுதிக்கொள்வார். அதிகாரி வழக்கை விசாரிப்பார் ; சிறிய பிழையாக இருந்தால் எச்சரித்து அனுப்புவார் ; பெரிய பிழையாக

இருந்தால் தண்டனை விதிப்பார். திருடர்களையும் சண்டையிடுபவரையும் விசாரிக்கும் இடமும் இதுதான். போலீஸ்காரர் திருடர் வராதபடி இரவில் தெருக்களில் காவல் வருவார்.

### அரும்பொருள்

நாற் சந்தி - நான்கு தெருக்கள் கூடும் இடம். சேதம்- நஷ்டம். போலீஸ் நிலைய அதிகாரி - போலீஸ் இன்ஸ்பெக்டர்.

### பயிற்சி

I. விடை கூறு :—

1. போலீஸ்காரர் என்ன என்ன வேலைகளைச் செய்கிறார்?

2. போலீஸ் நிலையத்தில் யார் யார் இருப்பார்?

3. அவர்கள் செய்யும் வேலைகள் யாவை?

II. 1. போலீஸ்காரர் செய்யும் வேலைகளைப் பத்து வரிகளில் எழுது.

2. போலீஸ்காரர் இல்லாவிட்டால் ஊரில் என்ன என்ன தீமைகள் உண்டாகும் என்பதை எழுது.

3. குமாஸ்தா, போலீஸ்காரர், போலீஸ் நிலையம், எச்சரித்து, பிழையாக.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. (1) கண்ணன் கள்வனைப் பிடித்தான்.

(2) பாரதியார் பாட்டைப் பாடினார்.

(3) காந்தியடிகள் அறம் உபதேசித்தார்.—இவற்றிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறு.




# 29. வீண் பெருமைக்காரன்

(நாடகக் காட்சி)

## காட்சி—1

[ஈசுவர சந்திரர் பெரிய புலவர்; ஆடம்பரம் இல்லாவர். அவர் ஒரு நாள் புகைவண்டியில் ஓர் ஊருக்குப் போனார்; புகைவண்டி நிலையத்தில் இறங்கினார். அவருடன் ஒரு மாணவன் இறங்கினான். அவன் வீண் பெருமைக்காரன்; ஒரு பெட்டியைத் தான் தூக்குவது பெருமைக் குறைவு என்று எண்ணிக் கூலியாளைக் கூப்பிட்டான்.]

**மாணவன்** :—கூலி! கூலி!

(ஈசுவரர் மாணவனைக் கவனித்துக் கொண்டு நிற்கிறார். கூலியாள் வரவில்லை.)

**மாணவன்** :—கூலிக்காரன் இப்பக்கம் வர வில்லையே! என்ன செய்வது! (சிறிது நேரம் பொறுத்து) கூலி! கூலி!

**ஈசுவரர்** :—ஐயா, உமக்கு என்ன வேண்டும்?

**மாணவன்** :—(திரும்பிப்பார்த்து) என் பெட்டியை என் வீட்டுக்கு எடுத்துவரக் கூலியாள் வேண்டும். நீண்ட நேரமாக அழைக்கிறேன். ஒருவனும் இப்பக்கம் வரவில்லை.

**ஈசுவரர்** :—நான் உமது பெட்டியை எடுத்துக் கொண்டு வருகிறேன், வாரும் போகலாம். (ஈசுவரர் பெட்டியை எடுத்துக்கொள்ளல் – மாணவன் தன்னைப் பெரியவனுக எண்ணிக்கொண்டு கர்வத்துடன் நடந்து போதல்.)

**மாணவன்** :—(ஈசுவரரைப் பார்த்து) இதுதான் என் வீடு. திண்ணைமீது பெட்டியை வை. உனக்குக் கால் ரூபாய் கூலி தருகிறேன், பெற்றுக்கொள். (கால் ரூபாய் தருதல்)

**ஈசுவரர்** :—ஐயா, கூலி வேண்டா. நான் போகிறேன்.

**மாணவன்** :—கூலி போதாதா? இந்தா, அரை ரூபாய், பெற்றுக்கொள்.

**ஈசுவரர்** :—நான் கூலிக்காக வரவில்லை. இந்தச் சிறு பெட்டியைத் தூக்க நீர் ஆள் தேடி வருந்தியதைப் பார்த்தேன்; உமக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பினேன். ஆதலால் கூலி வேண்டா. நான் போகிறேன்.

(போதல்)

## காட்சி—2

[இந்த நிகழ்ச்சி நடந்த அன்று மாலை நகரில் பெருங் கூட்டம் - ஈசுவரர் பேசுதல் - வீண் பெருமைக்கார மாணவன் - ஈசுவரர் பெருமையைக் கேள்விபட்டவன் ஆதலால் அவரைப் பார்க்க கூட்டத்திற்குப் போதல்.]

**மாணவன்** :—(கூட்டத்தில் நின்றிருந்த ஒருவரைப் பார்த்து) ஐயா, ஈசுவர சந்திரர் கூட்டத்திற்கு வந்துவிட்டாரா ?

**ஒருவர்** :—வந்துவிட்டார் ; இப்பொழுது பேசப் போகிருர். (ஈசுவரர் எழுந்து பேசல்)

**மாணவன்** :—ஐயா, இவரா ஈசுவரர் ?

**ஒருவர்** :—ஆம். இவர்தாம் ஈசுவரர் ; நாடெங்கும் புகழ்பெற்ற புலவர்.

**மாணவன்** :—(தனக்குள்) என்ன வியப்பு ! இவரா ஈசுவரர் ! இவர் காலையில் என் பெட்டியைத் தூக்கி வந்தவர் அல்லவா ? அடடா ! இந்தப் பெரியவர் என்ன அடக்கமாக இருக்கிருர் ! நான் இவரைக் கூலிக்காரன் என்று நினைத்தேனே ! இவர் என்னைப்பற்றி என்ன நினைத்தாரோ ! இவரைத் தனியே கண்டு நான் மன்னிப்புப் பெறவேண்டும்.

[கூட்டம் முடிதல் - மாணவன் ஈசுவரரிடம் சென்று, கண்ணீர் விட்டுக்கொண்டே அவர் காலில் விழுதல்.]

**ஈசுவரர்** :—(மாணவனை எடுத்து நிறுத்தி) தம்பீ, நீ ஏன் அழுகிருய் ?

**மாணவன்** :—ஐயா, என்னைத் தாங்கள் பொறுக்க வேண்டும். நான் என் பெட்டியைத் தூக்க வெட்கப்பட்டேன். தாங்கள் என் பெட்டியைத் தூக்கி வந்தீர்கள். தங்கள் அடக்கம் எனக்கு நல்ல பாடம் கற்பித்துவிட்டது. இனி யான் வீண் பெருமை கொள்ளேன்.

**ஈசுவரர்** :—தம்பீ, நம் வேலைகளை நாம் செய்வதில் அவமானம் இல்லை; பிறர்க்கு உதவி செய்வதிலும் குற்றம் இல்லை.

**மாணவன்** :—ஐயா, இனி நான் அடக்கத்துடன் நடந்துகொள்வேன். என் வேலைகளை நானே செய்துகொள்வேன்.

**ஈசுவரர்** :—தம்பீ, நீ சுகமாக இரு. (மாணவன் ஈசுவரரை வணங்கிப் போதல்)

**அரும்பொருள்**

புகழ் - பெருமை. வியப்பு - ஆச்சரியம்.

**பயிற்சி**

I. விடை கூறு :—

1. மாணவன் ஏன் கூலியாளைத் தேடினன் ?
2. ஈசுவரர் ஏன் பெட்டியை தூக்கிப் போனர் ?
3. ஈசுவரர் ஏன் கூலி பெற மறுத்தார் ?
4. மாணவன் கூட்டத்தில் ஈசுவரரைப் பார்த்ததும் தனக்குள் என்ன எண்ணினன் ?
5. மாணவன் ஈசுவரரிடம் யாது கூறி அழுதான் ?
6. ஈசுவரர் கூறிய புத்திமதி யாது ?
7. நீ இப்பாடத்திலிருந்து அறிவது யாது ?

II. இந்நிகழ்ச்சியைச் சுருக்கி 20 வரிகளில் எழுது.

# 30. செய்யுட் பாடம்

## I. ஆத்திசூடி—1

1. அறஞ்செய விரும்பு. அ
2. ஆறுவது சினம். ஆ
3. இயல்வது கரவேல். இ
4. ஈவது விலக்கேல். ஈ
5. உடையது விளம்பேல். உ
6. ஊக்கமது கைவிடேல். ஊ
7. எண் எழுத்து இகழேல். எ
8. ஏற்பது இகழ்ச்சி. ஏ
9. ஐயம் இட்டு உண். ஐ
10. ஒப்புர,வொழுகு. ஒ
11. ஓதுவது' ஒழியேல். ஓ
12. ஔவியம் பேசேல். ஔ
13. அஃகம் சுருக்கேல். ஃ

## II. ஆத்திசூடி—2

1. கண்டொன்று சொல்லேல். க
2. ஙப்போல் வளை. ங
3. சனி நீராடு. ச
4. ஞயம்பட உரை. ஞ
5. இளம்பட வீடெடேல். ட
6. இணக்கம் அறிந்து இணங்கு. ண
7. தந்தை தாய்ப் பேண். த
8. நன்றி மறவேல். ந
9. பருவத்தே பயிர்செய். ப

10. மன்றுபறித் துண்ணேல். ம
11. இயல்பு அல்லாதன செய்யேல். ய
12. அரவம் ஆட்டேல். ர
13. இலவம் பஞ்சில் துயில். ல
14. வஞ்சகம் பேசேல். வ
15. அழகு அலாதன செய்யேல். ழ
16. இளமையில் கல். ள
17. அறனை மறவேல். ற
18. அனந்தல் ஆடேல். ன

## III. கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
3. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
4. ஐயம் புகினும் செய்வன செய்.
5. கிட்டாதாயின் வெட்டென மற.
6. கீழோர் ஆயினும் தாழ உரை.
7. குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.
8. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
9. சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு.
10. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
11. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
12. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
13. நோன்பு என்பது கொன்று தின்னாமை.
14. புலையும் கொலையும் களவும் தவிர்.
15. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.

16. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
17. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
18. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
19. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
20. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.

—ஔவையார்

## IV. வெற்றி வேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை.
5. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.
6. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
7. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
8. உண்டிக் கழகு விருந்தோடு உண்டல்.
9. பெண்டிர்க் கழகு எதிர்பேசா திருத்தல்.
10. குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்.
11. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
12. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
13. அச்சமும் நாணமும் அறிவோர்க் கில்லை.
14. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே.
15. சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின் தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

—அதிவீரராம பாண்டியன்




## V. தமிழ் நாட்டு வணக்கம்

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

—பாரதியார்

## இந்நூலில் வந்துள்ள புதிய சொற்கள்

பாடம் 1. தமிழரசி - நிறைய - படிப்பகம் - வகுப்பு - அவற்றை-உண்கலம்-நக்கீரன்-முதலியன.

2. வாழ்கிறேம் - விளக்கண்டை - போக்குவார்-சாய்வு - மறுநாள் - நாள்தோறும் - நிகழ்ச்சி - விளக்குவார் - கையெழுத்து - ஐயம்.

3. விடுமுறை - வல்லவன் - மற்றவர்-முஸ்லிம் - சமர்த்தன் - பின்பற்றி - கிறிஸ்தவன் - கூடுவோம் - கற்பிப்பார் - பெருமாள் - வரிசை - இசை - அர்ச்சகர்.

4. கும்பிடு -மதத்தார்-முரசு - பார்ப்பார் - பணிந்திடும் - அத்தனை - நித்தம் - பார் - நிகர் - துருக்கர் - பற்பல - இன்பம் - சிலுவை - வேண்டா - பெருகும் - ஏசு - கொட்டு.

5. கலகல - தளதள - கடகட - சலசல - சோறு - மடமட - ஒலிக்கின்றன - பளபள - வழவழ - வெலவெலத்து - பழநி - பச்சைப்பசேர் - பயங்கரம்-படபட-வெள்ளைவெளேர் - மளமள - தடதட - கன்னங்கறேல்-முறிகின்றன - உருண்டன - செக்கச்செவேல்.

6. எண்மர் - மடக்குதல் - உரம் - தண்டால் - பயிற்சி - பெறுகிறது - விவரங்கள் - உதைத்து - வியர்வை - நொண்டி - நன்மை.

7. கொண்டுசெல் - வேறெரு - நீலாம்பரம் - சுற்றி - பூண்டு - களைந்து - இவற்றுள் - படர்கிறது - தெளிக்கிறேம் - மகிழ்ச்சி - கனகாம்பரம்.

8. உலோகம் - சுரங்கம் - சுத்தி - பொன்-எனப்படும் - முதலிய - வெள்ளி - மதிப்பு - களிம்பு-இரும்பு-தங்கம் - வெள்ளீயம் - ஈயம் - பவுன் - காரீயம் - பித்தளை - பயன்படும் - கலப்பு - வெண்கலம்.

9. பாவலர் - சென்னை - விடுதலை - அல்லவா - பத்திரிகை - ஆவல் - கற்பித்தார் - கட்டுரை - அதற்காக - பொழுது - பற்று - ஒற்றுமை - முன்னேற்றம் - மிகுந்த - சிறந்த.

10. வேதம் - பேதைமை - உயர்ச்சி - சேதம் - அற்றிடும் - பாவம் - இந்துஸ்தானம் - காணீர் - நீதி - காட்சி - சாதிகள் - அன்பு - வையம் - தாழ்ச்சி - மேலோர்.

11. நூற்றைம்பது - இந்துக்கள் - முடைதல் - சிவன் - பயிர்த்தொழில் - பண்ணை - மாதா - நெசவு - ஊரார் - மசூதி - பின்னுதல் - பெருமை.

12. அரசாங்கம் - சில்லறை - காவல் - குறித்துக் கொள் - இறப்பு - பண்டாரம் - மாதந்தோறும்-பிறப்பு- பொது வேலை - சம்பளம் - முன்னின்று - அழைக்க.

13. அருமைநாயகர் - வசதி - புல்வெளி - பெரியவர் - தீனி - பத்திரப்படுத்து - மேற்பார்வை - அமர்த்தினர் - நடைபெறுகிறது - சம்மதம் - வைக்கோல் - காய்ச்சி - கொட்டகை - என்பவை - பருத்திக் கொட்டை - அமைத்தார் - பிண்ணுக்கு - தயாரிக்க - தங்க - குறைவின்றி - பாராட்டு.

15. சோழன் - ஏரி - வாய்க்கால்-சீமை - தேசம் - எதிர்த்தது-சொரிந்தது - வெள்ளம்-பலன் - செய்தது - அணை - வாழ்த்தி - குளிர்ந்தது - அழிந்தன - பொங்கல் - பொய்கை - தருக்கள் - தளிர்த்தன.

16. பிரயாணம் - கால அளவு - கிடைக்க - அப்பால் - அவசரம் - அயல் - தக்கவை - விரும்பு-குறித்த- சுருங்கிய - உட்பகுதி.

17. வணக்கம் - மாணவி - வேடிக்கை - திருமணம் - செட்டி - எதிர்பார் - தரும்படி - வள்ளுவர் -

செங்குட்டுவன் - நண்பன் - வேண்டுகிறேன் - செம் பாக்கம் - இங்ஙனம் - கிறிஸ்மஸ் - செங்கற்பட்டு - பணிவுள்ள.

18. எழுதிய - உறை - முத்திரை - விற்பனை - நிலையம் - பிரித்து - கார்டு - அவ்வாறே - மதுரை - அஞ்சல் - வேலையாள் - நம்மூர் - செய்தி.

19. அகம் - இகழாதே - கசக்கி - உறுதி - ஊர - குறைவற்ற - இளமை - நன்று - செல்வம் - கல்வி - ஓதுவார் - கவலை - சிலை - தலைக்கடை - பந்தி - உள் ளளவு - கஞ்சி - குப்பை - நினை - கந்தை - பருவம் - உருவம்.

20. பொய் - தீங்கு - போக்கிவிடும் - கூடாது-வர மாட்டாது - சோம்பல் - புறம் - நெருங்கி - தட்டாதே- ஆகாது - தேம்பி - சோர்ந்து - நொண்டி - போராடு - நெஞ்சு - திடம் - வயிரம் - முறைமை.

21. சுந்தர பாண்டியன் - மறந்து-குறுக்கு - குறு கல் - இறங்கு - பலத்த-ஆயினும் - கருத்து - நிறுத்து- எச்சரிக்கை - செலுத்தினர்.

22. பாதை - கடக்க - துப்ப - விதி - கவனி-மிதி- ஏற்பட்டு - குறிப்பு - ஊனம் - ஓரம்-எச்சில் - எறிதல் - சந்தி.

23. காணப்படும் - மருத்துவம்-விபத்து-சங்கம் - முடிந்த - திருவிழா - ஆபத்து - போலீசார் - கிறுக்க - அகப்பட்ட - ஏதேனும் - பாதுகாப்பார்.

24. ஜில்லா - மிட்டாய் - விலை - சுற்றுப்புற - சிற் றுண்டி - திருச்சுற்று - காலமாக - இராட்டினம்-சொற் பொழிவு - மதம் - நடப்பது - வேடிக்கை - சைவம் - சம்பாதி - வழக்கம் - ஜவுளி - தேவையான - அம்மன்.

RTR 1134



25. திருநாடு - கேட்கிருய் - இந்திரனுர் - ஆளுவது - கொச்சி - மலை - குடகு - குமரேசன் - குறி - வாடை - மணம்-கோலம்-விழி - துடிக்கிறது - குலம் - ராஜாக்கள் - தோழன் - தருமர் - தரணி - முழுதும் - சிலை - நுதலன் - வடிவழகன் - விஜயன் - தீர்த்தம் - யாத்திரை - அரசி - அல்லி - மனம்.

26. தலைவர் - சீட்டு - நிலைமை - மருத்துவர் - புட்டி - உணவு - நோயாளி - அட்டை - மற்ற - சோதித்து - தொங்கவிடப்பட்டு - தாதிமார்.

28. முறைப்படுத்தி - திருடன் - குமாஸ்தா - உயர்த்தி - பிழை - தண்டிக்க - மோதிக்கொள் - அழைத்து.

29. வீண்பெருமை - வருந்தியது - பொறுக்க - ஈசுவர சந்திரர் - புகழ் - வெட்கப்படு - கூலியாள் - புலவர் - கொள்ளேன் - கர்வம் - அடக்கம் - அவமானம் - பெற்றுக்கொள் - மன்னிப்பு - சுகமாக.

சென்னை-600 008.
146193